# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 13 ஜனவரி - 2000 இதழ் - 1



அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப் பண்ணும், உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்க வேண்டிய வழியை எனக்குக் காண்பியும்...... சங்கீதம் 143:8

# அரிய வாய்ப்பு


திருமறை ஆசான் மாத இதழின் நிறுவன ஆசிரியர். சகோ. **E.Z.** செல்வநாயகம் அவர்கள் பல்வேறு தலைப்புகளின் கீழாக எளிய நடையில் எழுதி, அநேகர் பயன்பெற்ற 40க்கும் அதிகமான கட்டுரைகளைத் தொகுத்து ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள் என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம்.

தரமான தாளில் அச்சிடப்பட்டு, நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, அழகிய தோற்றமுடையதாய் வடிவமைக்கப்பட்டுள்ள இந்நூல் சுமார் 250 பக்கங்களைக் கொண்டது.

சத்தியம் விரும்பிகள் அனைவருக்கும் நிறைந்த பயனைத் தரக்கூடியது. தபாலில் பெற விரும்புவோர் அனுப்பவேண்டிய தொகை ரூ.30/- மாத்தரமே.

முகவரி : **தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27, காங்கயம் - 638 701.

குறிப்பு : தயவுசெய்து **M.O.** கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.



## ஆசானின் அறிவுரையிலே

*1.* உங்கள் உடனடி கவத்திற்கு *01*
*2.* ஆசிரியர் உரை *03*
*3.* புதிய நூற்றாண்டின் பூபாளம் *11*
*4.* தேவனுடைய வேலையை ஒருமித்து செய்வதெப்படி? *13*
*5.* பெண்கள் பகுதி *19*
*6.* வாலிபர் பகுதி *24*
*7.* வெளிப்படுத்தின விஷேசம் *28*

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

**Editor**
**S. RAJANAYAGAM**

**Honorary Editor**
**J.C. CHOATE**

**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamil Nadu, India**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol .13 | January - 2000 | Issue - 1


## உங்களின் உடனடி கவனத்திற்கு

மெய்த் தேவனை உளமார நேசிக்கும் வாசகர்களே,

உண்மைச் சத்தியம் ஓங்கி ஒலிக்கவேண்டுமென்பதில் தணியாத தாகம் கொண்ட உங்கள் ஒவ்வொருவரையும் உயிர்த்த இயேசுவின் பெயரால் பேர்பேராக வாழ்த்துவதில் பேருவகை கொள்கிறேன். இப்புதிய ஆண்டில், வேதத்தின் வெளிச்சமும், ஆவியின் அநுக்கிரகமும், பூரண சமாதானமும், நிறைந்த நலமும் உங்களுக்கு அளவில்லாமல் கிடைப்பதாக!

நமது, **திருமறை ஆசான்** மாத இதழுக்கு இதுவரை நடுவண் அரசால் கொடுக்கப்பட்டு வந்த **அஞ்சல் துறை சலுகை,** திடீரென நிறுத்தப்பட்டு விட்டதால், தபால் செலவு கிட்டத்தட்ட ஏழுமடங்கு உயர்ந்துள்ளது. இதன் காரணமாக **திருமறை ஆசான்** வெளியிடுவதற்கான பொருளாதாரச் சுமை கடுமையாக அதிகரித்துவிட்டது. இருப்பினும், நமது இதழ், தொடர்ந்து வெளிவருவதற்கான எல்லா முயற்சிகளையும் ஜெபத்துடன் எடுத்து வருகிறோம். நீங்களும் ஊக்கமாக ஜெபியுங்கள்.

மேலும், ஒரு முக்கிய முடிவை எடுக்கும்படியான கட்டாயத்திற்கும் உள்ளாக்கப்பட்டிருக்கிறோம். ஆம், **இம்மாதத்திலிருந்து திருமறை ஆசான் மாத இதழை விரும்பிக் கேட்பவர்களுக்கு மாத்திரம் அனுப்ப முடிவு செய்துள்ளோம்.**


எனவே, தொடர்ந்து இதழ் வேண்டுவோர் தங்கள் பதிவு எண்ணை தவறாமல் குறிப்பிட்டு, தெளிவான முகவரியுடன் ஓர் அஞ்சல் அட்டையில் எங்களுக்கு எழுத வேண்டும். வாசகர்களாகிய **உங்களிடமிருந்து எந்தப் பதிலும் இல்லையெனில், வரும் பிப்ரவரி மாதத்திலிருந்து உங்களுக்கு வரும் திருமறை ஆசான் இதழ் நிறுத்தப்படும்** என்பதை வேறு வழியின்றி தெரிவித்துக் கொள்கிறோம். ஆகவே, இந்த தேவ இலக்கியப் பணி சிறக்க உங்களிடமிருந்து தேவையான ஒத்துழைப்பை ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

இறுதியாக, பிரியமானவர்களே, உங்கள் ஆத்துமா வாழ்கிறது போல நீங்கள் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்க வேண்டுகிறேன்.

தேவசமாதானம் இவ்வருடம் முழுவதும் உங்களுடன் இருப்பதாக!

நன்றி!

ஆசிரியர்.



*ஆசிரியர் உரை*



# கொடியை ஏற்றுவோம்!

நாம் வாழும் இப்புவியில், பற்பல வண்ணங்களைகொண்ட விதவிதமான கொடிகளை நாம் காண்கிறோம். உலகில் உள்ள எல்லா தேசங்களும், அனைத்து அரசியல் கட்சிகளும், எண்ணிலடங்காத அமைப்புகளும் தங்களுக்கென கொடிகளை வைத்துள்ளன. அக்கொடிகளை உயர்த்துவதிலும், தாழ்த்துவதிலும் அவைகளின் மதிப்பும், மரியாதையும் அடங்கியிருக்கிறது. எனவே கொடிகள் அவைகளின் கௌரவ சின்னமாகக் கருதப்பட்டு, உயிரினும் மேலாக மதிக்கப்பெறும். ஒருவன் வைத்திருக்கும் கொடியை வைத்து அவன் யார் என்று நாம் அடையாளம் கண்டு கொள்ளமுடியும்.

இப்படிச் சிறப்புகள் பலவற்றை தன்னகத்தே கொண்டுள்ள கொடியானது, வேதாகமத்தின் பக்கங்களிலும் இடம்பிடிக்கத் தவறவில்லை. உன்னதத்தின் தேவனால் **என் இருதயத்திற்கு ஏற்ற தாசன்** என்று சாட்சியிடப்பட்ட தாவீது, ஆடுமேய்க்கும் சிறுவனாக இருந்தபோதே இராட்சச மனிதனாகிய கோலியாத்தை வென்று அநேகருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்திய தாவீது, அரசுக்கட்டில் ஏறி யுத்தங்கள் பல செய்த வெற்றி வீரன் என்று புகழப்பட்ட தாவீது, ஒரு சமயம் சீரியரோடு நடந்த யுத்தத்தில் பின்னடைவை சந்திக்கிறான். அப்பொழுது, இனி வெற்றிக்கு வழி என்னவென்று ஆருடம் பார்த்துக்கொண்டிராமல், தன் நிலையை உய்த்து ஆராய்ந்து பார்க்கிறான். மேலும்,தேவனுடைய பிள்ளைகளுக்கு வெற்றி எப்படிக் கிடைக்கிறது என்பதை இன்னும் தெளிவாகத் தெரிந்து கொள்ள சரித்திரத்தின் பக்கங்களை புரட்டிப் பார்க்கிறான். அங்கே அவனுக்கு ஒரு உண்மை வெளிப்பட்டது. அதன் பின்னனியில் எழுதப்பட்டதுதான் அறுபதாம் சங்கீதம். இச்சங்கீதத்தின் அடிப்படைச்செய்தி **தேவனாலே பராக்கிரமம் செய்வோம்** என்பதாகும்.

அதாவது, **நாங்கள் தோல்வி அடைந்தாலும், எங்களுக்கு பின்னடைவு ஏற்பட்டாலும், எங்கள் தேவனாலே நாங்கள் ஜெயம்கொள்ளுவோம். யெகோவா எங்கள் சத்துருக்களை மிதித்துப்போடுவார்** என்பது. இப்படி பெரும் நம்பிக்கையை நெஞ்சிலே சுமந்து எழுதப்பட்ட இச்சங்கீதத்தில் **சத்தியத்தினிமித்தம் ஏற்றும்படியாக உமக்கும் பயந்தவர்களுக்கு ஒரு கொடியை கொடுத்தீர்**(சங்.60:4) என்ற வசனம் இடம்பெற்றுள்ளது.இங்கே தாவீது **கொடி** என்ற வார்த்தையை பயன்படுத்தியதற்கு சரித்திரப் பின்னணிஉண்டு.

தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து, விடுதலை பெற்று, வனாந்தர யாத்திரையில் இருந்தபோது, அமலேக்கியரோடு முதல் யுத்தத்தை எதிர்க்கொள்ளவேண்டியிருந்தது. நான்கைந்து தலைமுறைகள் அடிமைகளாக இருந்தபடியால், எதிரிகளை எதிர்கொள்வதற்கு தேவையான நெஞ்சுரமும், எதிரிகளை மேற்கொள்ளுவதற்குத் தேவையான போர்முறைப்பற்றிய அறிவும் அற்றவர்களாக இருந்தார்கள். ஆயினும் கூட, யெகோவா அவர்களுக்காக யுத்தம் செய்து, அவர்களுக்கு வெற்றியைத்தந்தார். ஆம், அச்சமயத்தில் பிரமாணங்களின் தந்தையாகிய மோசே, மலையுச்சியின் மீது நின்று, தேவனுடைய கோலை தூக்கிப்பிடித்து நின்றான். அப்பொழுது இஸ்ரவேலர் மேற்கொண்டார்கள். மோசேயின் கையில் இருந்த தேவனுடையகோல் தாழந்தபோது அமலேக்கியர் மேற்கொண்டார்கள். **தேவனுடைய கோலை உயர்த்திப் பிடிப்பதில்தான் வெற்றி அடங்கியிருக்கிறது** என்பதை **உணரந்துக்கொண்ட ஆரோனும், ஊரும்**, மோசேயை ஒரு கல்லின்மீது உட்காரவைத்து ஆளுக்கொரு பக்கமாக நின்று தேவனுடைய கோல் உயர்ந்த நிலையிலேயே இருக்கும்படி தாங்கிப்பிடித்தார்கள். அப்பொழுது, யோசுவா யுத்தகளத்திலே நின்று, போர்முறையின் அடிச்சுவடுகள் கூட அறிந்திராத கத்துக்குட்டிகளை வைத்து போராடி பெறும் வெற்றி கண்டான். (யாத்.17:9-16)

இப்படி இஸ்ரவேலுக்கு, தனது சுதந்திர வரலாற்றில் கிடைத்த வெற்றியை, தேவனுடைய கோலை உயர்த்திப் பிடித்ததால் தங்களுக்குக் கிடைத்த அந்த அபார வெற்றியை நினைவுகூரும் படியாய், ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு **யேகோவா நிசி** என்று மோசே பெயரிட்டான். இதற்கு **யெகோவா என் கொடி** என்று பொருள்.இவ்வுண்மையை விளங்கிக் கொண்டதாலேயே, தாவீது அக்குறிப்பிட்ட சங்கீதத்தின் வசனத்தை எழுதியிருக்க வேண்டும். மோசேயின் நாட்களில் தேவனுடைய ஜனங்களுக்கு வெற்றிகிட்டும்படியாக, தேனுடைய கோல் உயர்த்தப்பட்டதை போலவே இப்பொழுதும் வெற்றி வேண்டுமானால், தேவனுடைய் கொடி ஏற்றப்பட வேண்டுமென்று கொடியை ஏற்றுதல் என்பது, ஒரு நிலையைத் தெளிவாக வேளிப்படுத்துவதாகும். அங்கே, சீரியரோடு நடந்த யுத்தத்தில் பின்னடைவு ஏற்பட்டபோது, அதற்கு கார்ரணம் என்னவென்பதைக் கண்டு கொண்டதோடல்லாமல் அதற்குப் பரிகாரம் என்னவென்பதையும் புரிந்து கொண்டு, யெகோவாவுடைய கொடியின் தேவையை உணர்ந்து இச்சங்கீதத்தைப் பாடியுள்ளான்.

இக்கட்டான நேரத்தில் தாவீது பாடின இச்சங்கீதத்தின் சத்தியத்தினிமித்தம் ஏற்றும்படியாக உமக்கு பயந்தவர்களுக்கு ஒரு கொடியைக் கொடுத்தீர் என்ற வசனத்தை ஆதாரமாக வைத்து அதைக்கிறிஸ்தவத்தோடு ஒப்பிட்டுப்பார்த்தால், அதிலிருந்து நமக்குப் பயன்படும் சில பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியுமென்று தெரிகிறது. ஆம் ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாகிய நாம் ஆவிக்குரிய போரட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். இப்போரட்டத்தில் நமக்கு வெற்றி கிட்ட வேண்டுமானால், நாமும் யெகோவாவால் கொடுக்கப்பட்ட கொடியை உயர்த்தியாக வேண்டும். ஆகவே கிறிஸ்தவர்களுக்கு, ஆவிக்குரிய இஸ்ரவேலர்களுக்கு கொடுக்கப்பட்ட கொடி பற்றித் தெரிந்துகொண்டு, அதை நம் வாழ்வில், கிறிஸ்தவ ஜீவியத்தில் ஏற்றுவோம், வெற்றி பெறுவோம்.

## I. *கிறிஸ்வர்களின் கொடி எது?*

நாம் முதலாவது தெரிந்து கொள்ள வேண்டிய காரியம், கிறிஸ்தவர்களின் கொடி எது என்பது. கிறிஸ்தவம் ஒரு விசுவாசமார்க்கம். எபிரேய ஆசிரியர், இந்த மார்க்கத்திற்கு அடிப்படையான விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவரும் இயேசுகிறிஸ்து தான் என்று அழகாகச் சொல்லியுள்ளார். (எபி.12:1). இன்னும் இப்பூமியில் நாம் வெற்றியுள்ள கிறிஸ்தவர்களாக ஜீவிப்பதற்கு தேவையான பெலனை நமக்குக்கொடுக்கிறவாரக கிறிஸ்து உள்ளார் என்றும் பலடியார் கூறியுள்ளார். **என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு** (பிலிப்.4:13) என்று அதாவது போராட்டம் நிறைந்த கிறிஸ்தவ ஜீவியத்தில், தான் வெற்றி பெற கிறிஸ்து போதும் என்கிறார். மேலும், அப்போஸ்தலன் பேதுரு கூறும் போது .....**ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு நீங்கதம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனரர்.** (1பேதுரு.2:21) என்று. அதாவது வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கு நம்மை வழி நடத்துவதற்கு அவரின் அடிச்சுவடுகள் போதும் என்கிறார்.

இன்னும், கிறிஸ்தவ ஜீவியத்தில் நல்ல போராட்டத்தைப்போராடும் அனைவருக்கும் நீதியுள்ள நியாயாதிபதியாகிய கிறிஸ்து, நீதியின் கீரிடத்தைத் தருவார் என்று பவுல் இளம் பிரசங்கியாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்பொழுது கூறுகிறார். (2தீமோ.4:8). அதாவது, நித்திய வாழ்வுக்கான நுழைவுச்சீட்டு நமக்கு கிறிஸ்துவால் கொடுக்கப்படுகிறது. அதுமாத்திரமல்ல,

இப்பூமிக்குண்டான வாழ்வில் பல வெற்றிகள் அவரால் கிடைக்கிறது. பாவத்திலிருந்தும் (2கொரி.1:14) பலவித சோதனைகளிலிருந்தும் (1கொரி.10:13) உபத்திரவங்களிலிருந்தும் (2கொரி.1:3-5) மரண பயத்திலிருந்தும் (1கொரி.15 : 55-57) கிறிஸ்து நமக்கு வெற்றியைக் கொடுத்துள்ளார். கிறிஸ்துவினாலும், கிறிஸ்துவுக்குள்ளும் தான் நமக்கு வெற்றி உண்டு.

ஆகையால் அருமையானவர்களே, கிறிஸ்தவத்திற்கும், கிறிஸ்தவர்களாகிய நமக்கும் ஒரு கொடி உண்டு. அது கிறிஸ்துவாகிய கொடி. இக்கொடியை உயர்த்துவதிலும், தாழ்த்துவதிலும் நம்முடைய ஆவிக்குரிய போராட்டத்தின் வெற்றி அடங்கியிருக்கிறபடியால், நாம் யாவரும், கிறிஸ்துவாகிய கொடியை நம் வாழ்வில் ஏற்றுகிற மக்களாக இருப்போமாக!-அப்படி ஏற்றும் பொழுது தான் வாடாத ஜீவ கிரீடம் நமக்குக்கிடைக்கும்.

## II. *இந்தக்கொடி யாரால் கொடுக்கப்பட்டது?*

இரண்டாவதாக நாம் தெரிந்த கொள்ள விரும்புவது, இந்தக் கொடி கிறிஸ்துவாகிய கொடி யாரால் நமக்கு கொடுக்கப்பட்டது என்பது. எப்பொழுதுமே, ஒன்றை யார் கொடுத்தார்கள் என்பதை வைத்து, அதற்கான மதிப்பும், மரியாதையும கொடுக்கப்படும்.நமது கட்டுரைக்கான வசனத்தில் பார்க்கும்போது **ஒரு கொடியைக் கொடுத்தீர்** என்று உள்ளது. அதாவது கொடியை தேவன் கொடுத்ததாகச் சொல்லுகிறார். ஆகவே கிறிஸ்துவாகிய கொடிக்கு ஈடும் இணையும் இல்லை. ஆம், இந்தக்கொடியை கொடுத்த தேவன் நித்தியமானவர் (உபா.33:27) அவர் உன்னதமானவர் (ஆதி.14:18) அவர் சர்வ வல்லமையுள்ளவர் (ஆதி.17:1,2) அவர் ஜீவிக்கிறவர் (யோசு.3:10) அவர் இஸ்ரவேலின் பரிசுத்தர்.(ஏசாயா.43:3) இப்படி அவரைப் பற்றி அநேக காரியங்களை நாம் சொல்லிக் கொண்டே போகமுடியும். இப்படிப்பட்ட தேவன் கிறிஸ்துவாகிய கொடியை கொடுக்கும் முன்பாக, தீர்க்கதரிசனங்களில் அவரைப்பற்றி எவ்வளவு அழகாக வெளிப்படுத்தியுள்ளார் என்று பாருங்கள்.நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு என்னப்படும்.(ஏசா.9:6) அப்படியானால் கிறிஸ்துவாகிய கொடிக்கு, ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் வாழ்க்கையில் எப்படிப்பட்ட இடம் கொடுக்க வேண்டுமென எண்ணிப்பாருங்கள்.

ஒரு கட்சி அல்லது ஒரு இயக்கம் அல்லது ஒரு அமைப்பு போன்றவை ஒருவனுடைய வாழ்க்கையில் எந்த நன்மையும் செய்திருக்காது. ஆனாலும், அவைகளைச் சேர்ந்த அநேகர் அவைகளின் கொடிகளைச் சுமந்து திரிகிறதை நாம் காண்கிறோம். கடவுள் இல்லையென்று சொல்லுகிறவன் கூட தனக்கென ஒரு கொடியை வைத்து தன்னுடைய வாழ்க்கையில் அந்தக் கொடியைத் தூக்கிப்பிடிக்கிறான். இன்னும் கல்லையும், மண்ணையும் வணங்குபவர்கள் கூட தங்களுக்கென்று சில வகையான கொடிகளை உண்டாக்கி, அவைகளைக் கூச்சமும், அச்சமும் இல்லாமல் உயர்த்திக் காட்டுகின்றனர்.

இப்படிச் சுமந்து, தூக்கி, உயர்த்திப்பிடிக்கின்ற கொடிகளை எல்லாம் நாம் கவனித்திப் பார்த்தால் அவைகளனைத்தும் மனிதனால், மனிதனுக்குக் கொடுக்கப்பட்டவைகள் என்பது சந்தேகத்திற்கிடமின்றிதெரியும். ஆனால் அருமையானவர்களே, நம்முடைய கொடியாகிய கிறிஸ்து, உன்னதத்தின் தேவனால் நமக்கு கொடுக்கப்பட்டடுள்ளார். நம்முடைய நன்மைக்காக அவர் கொடுக்கப்பட்டுள்ளார். இந்த உண்மையை யோவான் அப்போஸ்தலன் எவ்வளவு நேர்த்தியாகச் சொல்லுகிறார் பாருங்கள். **தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல், நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத்தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவான்.3:16)** என்று. இந்தக் கொடியாகிய கிறிஸ்து, நானும், நீங்களும் நித்திய ஜீவனை அடையும்படியாய் தேவனால் கொடுக்கப்பட்டுள்ளார். ஆகவே நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படியாய், கிறிஸ்துவாகிய கொடியை நம் வாழ்வில் ஏற்றுவோமாக!

## III. இந்தக் கொடி யாருக்கு கொடுக்கப்பட்டது?

மூன்றாவதாக, நாம் தெரிந்து கொள்ள வேண்டிய காரியம், கிறிஸ்துவாகிய கொடி யாருக்குக் கொடுக்கப்பட்டது என்பது. **தேவனுக்கு பயந்து நடக்கிறவர்களுக்கு இந்தக்கொடி கொடிக்கப்பட்டதாக** சங்கீதக்காரன் சொல்லுகிறான். (சங்60:4). தேவன், இயேசுவை உலகில் உள்ள அனைவருக்குமே அனுப்பினார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. யோவான் ஸ்நானகன் இயேசுக் கிறிஸ்வைக் குறித்து சாட்சி சொன்னபோது **இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி** என்றே சொன்னார். (யோவா 1:29) ஆனால், அவர் யாருக்காக அனுப்பபட்டாரோ அந்த உலகமும், அவர் எந்த ஜனத்திற்காக வந்தாரோ அந்த ஜனமும் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இது குறித்து யோவான் அப்போஸ்தலன் தனது நற்செய்தி நூலில் இவ்விதம் கூறியுள்ளார்.

அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்கு சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. (யோவா.1:10,11) என்று.

அப்படியானால், கிறிஸ்துவாகிய கொடி யாருக்குக் கொடுக்கப்பட்டார்? தேவனுக்கு பயந்து நடக்கிறவர்களுக்கே. அவருக்கு பயந்து நடக்கிறவர்கள் யார்? தேவனில் அன்பு கூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களே அவருக்கு பயந்தவர்கள்(1யோவா.5:2) என்று யோவான் கூறுகிறார் ஆகவே, அவருக்கு பயந்து நடக்கிறவர்கள் கிறிஸ்துவாகிய கொடியை ஏற்றும் பொறுப்பை இங்கே ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இக்காரியத்தை அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதின் மூலம் ஒருவன் செய்யவேண்டும். அவருடைய கற்பனைகள் வேத வசனங்களே. கிறிஸ்துவின் பிறப்பிற்குப் பின் வாழ்கிற நமக்கு வேத வசனங்கள் என்பது புதிய ஏற்பட்டு உபதேசங்களே. ஆகையால் அவருக்கு பயப்படுகிற யாவரும்புதிய ஏற்பட்டு உபதேசத்திற்கு மாத்திரம் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களாக இருக்கவேண்டும். ஆம் நம்முடைய உணர்வுகளுக்கும், நூதனமான உபதேசங்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும், அர்த்தமற்ற ஆர்ப்பாட்டங்களுக்கும், பக்தியின் பேரால் நடக்கும் கூச்சல்களுக்கும்.நாம் நம்மை ஒப்புக்கொடுக்கக் கூடாது. ஏனெனில், நான் சொல்லிய வசனமே மனிதனை கடைசி நாளில் நியாயந்தீர்க்குமென்று இயேசு சொல்லியுள்ளார்.(யோவா.12:48)

ஆகையால் புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு மாத்திரம் தங்களை ஒப்புக்கொடுத்து, அதில் சொல்லியுள்ளபடி வாழ்கிறவர்களே, தேவனுக்குப் பயந்தவர்கள். கிறிஸ்துவாகிய கொடி இப்பொழுது இவர்களிடமே கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு ஒப்புக்கொடுத்த நாம், ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று முயற்சிக்கும் நாம், நம்முடைய பேச்சின் மூலமாகவும் (அப்.8:35) நம்முடைய நடக்கையின் மூலமாகவும் (எபே.4:1). கிறிஸ்துவாகிய கொடியை ஏற்றுவோமாக!

## IV. இக்கொடி எதற்காக கொடுக்கப்பட்டுள்ளது?

இறுதியாக, நாம் கவனிக்க வேண்டிய காரியம், இக்கொடி எதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது. சங்கீதக்காரன் இது குறித்துச் சொல்லும்போது சத்தியத்தினிமித்தம் ஏற்றும்படியாக என்று கூறுகிறார். ஆக, இக்கொடி கொடுக்கப்பட்டதற்கு ஒரு தெளிவான நோக்கம் உண்டு.

ஆனால், நாம் வாழும் இந்த நாட்களில், தேவனால் அவருக்கு பயந்தவர்களுக்காகக் கொடுக்கப்பட்ட கிறிஸ்துவாகிய கொடி எதற்காக ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது? இதற்கு விடை கண்டுபிடிக்க ஒருவன் பூத கண்ணாடியைத் தூக்கிக் கொண்டு அலையத் தேவையில்லை. பெரும்பாலும், ஆம், பெரும்பாலும், பிழைப்பினிமித்தமே ஏற்றப்படுகிறது. இக்கருத்தை வெளியிடுவதற்காக என்னைத் தயவாய் மன்னியுங்கள். என்னுடைய இக்கருத்தில், உண்மையில்லாமலில்லை என்பதை, மெய்க்கிறிஸ்தவத்தை உன்னிப்பாகக் கவனிக்கும் ஒவ்வொருவரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்வர். சத்தியத்தினிமித்தம் ஏற்றுப்பட வேண்டிய கிறிஸ்துவாகிய கொடி, இந்நாட்களில் பெரும்பாலும் பிழைப்பினிமித்தமே ஏற்றப்படுகிறது. இந்த நிலை,ஏதோ நம்முடைய இந்த நாட்களில் தான் என்று நாம் திகைக்க வேண்டிய அவசியமில்லை. முதல் நூற்றாண்டுக் காலத்திலேயே இந்த அவல நிலை இருந்ததாக அப்போஸ்தலன் பவுல் அங்கலாய்க்கிறார்.

**அன்றியும் சகோதரரே நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப்புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்த நயவசனிப்பாலும் இச்சகப்பேசினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறார்கள்.**(ரோம.16:16,17,18) இன்னும் தீத்துவுக்குப்பவுல் எழுதும்போது, இப்படிப்பட்டவர்களுடைய வாய் அடக்கப்படவேண்டுமென்று கூறுகிறார்..... **அவர்களுடைய வாயை அடக்கவேண்டும். அவர்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தாகதவைகளை உபதேசித்து முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப்போடுகிறார்கள் என்று (தீத்.1:11).**

இந்த கிறிஸ்துவாகிய கொடி பிழைப்புக்காகவும், வயிற்றுக்காகவும் இந்த ஏற்றப்படாமல் சத்தியத்திற்காக ஏற்றப்பட வேண்டுமானால், எது சத்தியம் என்ற கேள்வி இங்கே எழுகிறது. இதற்கான விடை இயேசுவின் ஜெபத்தில் நமக்குக் கிடைக்கிறது. **உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம்.** (யோவா.17:17). அப்படியானால் வேத வசனங்களைப் படிப்பதன்மூலமும், அவைகளை விசவாசிப்பதன் மூலமும், அவைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலமும், அவைகளின் உபதேசத்தின்படி பாவமன்னிப்பைப் பெறுவதன் மூலமும், அவருடைய சபைக்குள்ளாக நிலைத்திருப்பதின் மூலமும், நம்முடைய விசவாசத்தைப் பற்றி மற்றவர்களுக்கு அறிவிப்பதன் மூலமும், கிறிஸ்துவாகிய கொடியை நாம் ஏற்றமுடியும்.

என் அன்பிற்கினிய வாசகர்களே, ஒரு புதிய ஆண்டு துவங்கி சற்றேறக்குறைய ஒருமாதம் கடந்து போய்விட்டது. இந்தப்புதிய ஆண்டிலே நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? அவருக்கு பயப்படுகிற பிள்ளைகளாகிய நம்மிடத்திலே தேவன் கிறிஸ்துவாகிய கொடியை நாம் ஏற்றும்படியாக் கொடுத்துள்ளார். அந்தக்கொடியை நாம் எந்த நிலையில் வைத்துள்ளோம்? கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்போம். கிறிஸ்துவாகிய கொடி கொடுக்கப்பட்டதின் நோக்கம் உங்கள் வாழ்வில் நிறைவேறிவிட்டதா? அந்த நோக்கம் இன்னும் நிறைவேறாமல் இருக்குமானால் புதிய ஏற்பாட்டுச் சுவிசேஷத்திற்கு உங்களை உடனடியாக ஒப்புக் கொடுங்கள். அதன் மூலம் நீதியின் கிரீடத்திற்குச் சொந்தக்காரர்களாகுங்கள்.

உண்மைச் சத்தியத்திற்கு உங்களை ஒப்புக்கொடுக்கும் ஆசீர்வாதம் பெற்றோரே! நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்? இந்த கொடியை ஏற்ற வேண்டிய பொறுப்பை தேவன் நம்மிடம் தானே கொடுத்துள்ளார். சத்தியத்திற்கு உண்மையாக பயப்படுகிறவர்கள் அப்பொறுப்பை நிறைவேற்ற வேண்டுமென்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறாரே, நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்..... என்று நம்முடைய ஆண்டவர் சொல்லுயிருக்கிறாரே(லூக்12:48). பயமாக இல்லையா?

அருமையானவர்களே, சர்வ வல்ல தேவன் நமக்குக் கொடுத்த கொடியாகிய கிறிஸ்துவை நாம் ஒவ்வொருவரும் ஏற்றுவோம். நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் ஏற்றுவோம். நம்முடைய குடும்பத்தில் ஏற்றுவோம். நம்முடைய சமுதாயத்தில் ஏற்றுவோம். நம்முடைய மாநிலத்தில் ஏற்றுவோம். நம்முடைய தேசத்தில் ஏற்றுவோம். ஆம், நம்முடைய மண்ணை கிறிஸ்துவுக்குச் சொந்தமாக்குவோம். ஆமென்!

*செ. ராஜநாயகம்*

### கொடியாம் கிறிஸ்து தரும் கிரீடங்கள்

| | |
|---|---|
| **நீதியின் கிரீடம்** | **(2.தீமோ.4:8)** |
| **ஜீவ கிரீடம்** | **(யாக்.1:12 வெளி.2:10)** |
| **மகிமையின் கிரீடம்** | **(1பேதுரு.5:4)** |
| **மகிழ்ச்சியின் கிரீடம்** | **(1.தெச.2:19)** |

## புதிய நூற்றாண்டின் பூபாளம்

அப்போஸ்தலர் நடபடிக்கையை
அடிக்கடி படியுங்கள்
சபைச் சரித்திரத்தை சரியாக
அடையாளம் காணுங்கள்

இரண்டாயிரம் ஆண்டுகளாய்
எத்தனையோ சபைகள் தோன்றின
எல்லாம் வல்ல இயேசுவின்
புகழ் பாடி.

சொல்லாத கொள்கை எல்லாம்
சொல்லிப் போயின.
இல்லாத குழப்பங்கள் ஏராளமாய்
சபையில் குவிந்தன.

மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்
சபைகள் முழித்தன.
சிலவேளை சபைக்கே முக்கியம்
தராமல் தவித்தன

இயேசு எனக்குப் போதும் என்று
புது சித்தாந்தம் பிறந்தன
இப்படி சத்தியம் சாய்ந்தன
சாத்தான் கை ஓங்கின.

சபைக்கு; சரீரம், மணவாட்டி
வீடு, ராஜ்ஜியம், மந்தை என்ற
சான்றான சத்தியப் பெயர்கள்
வேதத்தில் விளம்பிட காண்கிறோம்.

எல்லாம் ஒன்றைக் குறிக்கின்ற பெயரே
ஏதும் வேறல்ல ஒன்றே
விலையானது அவர் சரீரம் ஒன்றே
உயிர்த்துத் தலையானதும் ஒன்றே.

இருந்தும் வேண்டாத வம்புகள்
விலைபோகாத வீம்புகள்
இயேசுவுக்கு ஏற்பட்ட தோ தழும்புகள்
இது நியாயந்தான? விளம்புகள்.

புதிய ஏற்பட்டை மீண்டும் படியுங்கள்
எபேசியர் நான்காம் அதிகாரத்தை திருப்பங்கள்
பவுலில் போதிப்பை அங்கே பாருங்கள்
சபை ஒன்றே என்பதை உணருங்கள்.

அதன் பெயர் உலகெங்கும் ஒன்றாம்
கிறிஸ்துவின் சபை என்பதே நன்றாம்
வேதமே அதற்கு எப்போதும் சான்றாம்
சபைக்கு வேறே நாமங்கள் சரியன்றாம்.

சகோ. இரத்தின ஜோதிநாயகம்.

## இரட்சிப்பின் படிகள்

| | | |
|---|---|---|
| கேள்விப்படுதல் | : | ரோமர் 10 : 17 |
| விசுவாசித்தல் | : | மாற்கு 16 : 16 |
| மனந்திரும்புதல் | : | அப்போ. 2 : 38 |
| அறிக்கையிடுதல் | : | ரோமர் 10 : 10 |
| ஞானஸ்நானம் பெறுதல் | : | அப்போ.22 : 16 |



# தேவனுடைய வேலையை ஒருமித்து செய்வதெப்படி?

நீங்கள் இருக்குமிடத்தில் கிறிஸ்துவின் சபையை ஆரம்பிப்பது எப்படி? என்ற பாடம் தொடர்கிறது. நீங்கள் சபையைக் குறித்து கேள்விப்பட்டிருக்கலாம். வேதாகமம் அந்த சபையைக் குறித்து என்ன போதிக்கிறது என்பதையும் அறிந்திருக்கலாம், ஆனால் நீங்கள் செய்ய வேண்டிய முக்கியமான காரியம் என்னவென்றால் தேவனுக்குக் கீழ்ப்படிவதின் மூலம் இரட்சிக்கப்பட்டு பின்பு அந்த ஒரே சபையில் சேர்க்கப்படுவதே. நீங்கள் இதைச் செய்வீர்களென்றால், நீங்கள் இருக்குமிடத்தில் கர்த்தருடைய சபையை ஆரம்பிப்பதற்கு ஒரு பேருதவியாக இருக்கும். இதை வாசிக்கும் நீங்கள் ஏற்கனவே கர்த்தருடைய சபையின் அங்கத்தினராயிருப்பீர்களானால், ஒரு வேளை நீங்கள் இருக்கிமிடத்தில் சபை இல்லாதிருந்தால், அதைக் குறித்து நீங்கள் ஏதாகிலும் செய்ய நாங்கள் உங்களை ஊக்கப்படுத்துகிறோம். யாராவது, ஏதாவது செய்யட்டும் என்ற திருப்தியோடு நாம் அசாதரணமாய் அமர்ந்திருக்கவேண்டாம். நீங்கள் ஒரு முதல் முயற்சி எடுங்கள். முழுமையான உத்வேகத்தோடு நீங்கள் முயன்றால் நீங்கள் ஒரு மாற்றத்தைக் காணலாம். உங்களது நிலைமையைக் குறித்து எங்களுக்கு தெரிவியுங்கள்.

இத்தொடர்பாடத்தின் மையக்கருத்தை நாம் மனதில் கொண்டு ஒருமித்து தேவனுடைய வேலையை செய்வதெப்படி? என்பதைக் குறித்துப் பார்ப்போம்.

வேதாகமம் ஒற்றுமையைக் குறித்தும், கிறிஸ்துவுக்குள் நாம் ஒன்றாய் இருக்கவேண்டும் என்பதைக் குறித்தும் போதிக்கிறது என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டுமென்பதே என் ஆசை. கிறிஸ்து ஒரே சபையைக்கட்டினார். அந்தசபையை வளர்க்கும்படி, நம்மிடத்தில்எதிர்பார்க்கிறார். யோவான்.17:20-23வசனங்களில், அப்போஸ்தலர்களுக்காகவும், அவர்களால்மனமாற்றம் அடையப்போகிறவர்களுக்காகவும் மற்றும் அப்போஸ்தலர்களுக்குப்பின்கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியப்போகிறவர்களுக்காகவும் இயேசு ஜெபித்தார்.

நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லமால், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்கிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

கர்த்தருடையவார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, ஒற்றுமையாய் இருக்கிற தேவ ஜனங்களைக் காட்டிலும் அருமையானது வேறொன்றுமில்லை. அதாவது இரட்சிக்கப்பட்டு, ஒரே சபையில் அங்கத்தினராயிருந்து, கர்த்தருடைய நாமத்தைத் தரித்துக்கொண்டு, கர்த்தருக்காய் ஒருமித்து வேலை செய்து, அவரைத் தொழுதுகொண்டு, அவருக்கு உண்மையாய் இருக்கவேண்டுமென்பதே அக்காரியம். கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதுகையில், சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.(1.கொரி.1:10) தாவீது இதைக் குறித்து நீண்டநாட்களுக்கு முன்பே கூறுகையில், இதோ சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது.(சங்.133.1)

ஒற்றுமையாய் இருப்பது மிகுந்த அருமையானதாயிருக்கிறது. ஆனால் பிரிவினையோ அசிங்கமும், அழிவுமானதாயிருக்கிறது. கிறிஸ்து கூறுகையில், இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி, தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலை நிற்கமாட்டது. (மத்.12:25) என்று விளம்புகிறார். பவுல் கொரிந்து சபையிலிருந்த பிரிவினையைக் கண்டனம் பண்ணும்போது, அதன் அங்கத்தினர்களைப் பார்த்து, கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்? பவுலில் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என்று கேட்கிறார். (1கொரி.1:13). ஒவ்வொரு கேள்விக்கும், இல்லை என்பதுதான் பதில் என்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் பவுல் இங்கு சொல்ல விரும்புவதெல்லாம் நாம் மனுஷரைப் பின்பற்றாமல், கிறிஸ்துவைப் பின்பற்றவேண்டும்என்பதே. ரோமாபுரியிலுள்ள பரிசுத்தவான்களுக்கு பவுல் எழுதும்போது அன்றியும் சகோதரரே நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப்

பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள். (ரோமர். 16:17,18) என்று கூறுகிறார்.

ஒரு பிராந்திய சபையில் சிலவேளைகளில் சகோதரர்கள் ஒருவரோடொருவர் ஒத்துப்போவதில்லை. ஒருவேளை இப்பிரச்சினை உபதேசக்கோட்பாடுகளால் எழுவதாக இருக்கலாம். ஆனால் பெரும்பாலும் ஒரு தனிநபரைக் குறித்தோ, அல்லது சிறு, சிறு காரியங்களைக் குறித்தோ, அல்லது பொறாமையினாலோ, பகைமையினாலோ வருகிறது. சில சமயங்களில் யார் பிரசங்கிக்வேண்டுமென்பதிலும் யார் அநேகருடைய கவனத்தை ஈர்க்கிறார்கள் என்பதிலும், மேலும் இதைப் போன்ற காரியங்களில் பிரச்சினை எழும்புகிறது. இது கவலைக் குரியதாயிக்கிறது. சபையின் அலுவல்களைத் தடுப்பதற்கு இது ஒரு காரணமாகவும் மற்றும் சபையின் அங்கத்தினரல்லாதவர்கள் அங்கத்தினர்களுக்குள்ளே இப்பிரச்சனையைக் காணும்போது சபைக்கு மரியாதைக் குறைவைஏற்படுத்துகிறது. அங்கத்தினர்களிடையே பிரிவினை இருக்கும்போது மக்களைச் சந்திப்பது முடியாத காரியமாய் போகிறது. நாம் தேவனை நேசிக்கவும் ஒருவரையொருவர் நேசிக்கவும், ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டவும், உதவவும், அங்கத்தினர்களுக்கெல்லாம் ஜெபிக்கவும் வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்.

சில நேரங்களில், ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் கிறிஸ்துவின் சபைகள் ஒன்றோடொன்று ஒத்துபோவதில்லை. அவர்கள் கூட்டாகச்சேர்ந்து ஒருமனதாய் ஊழியம் செய்வதும் இல்லை. சுவிசேஷக் கூட்டங்களாலும் சரி, அல்லது மற்ற நற்காரியங்களாலும் சரி ஒருவருக்கொருவர் உதவியாயிருப்பதுமில்லை. பிரசங்கியார்கள் இக்காரியங்களில் சிலவேளை மோசமாக செயல்படுவதுமுண்டு. அவர்கள் ஒருவரோடொருவர் போட்டி போடுவதைப் போன்று இது அமைகிறது. இது தீமையும், தவறானதுமாகும். இப்படிப்பட்டபிரச்சினைகள் நிறைந்திருக்கும்பொழுது சபையானது எப்படித்தான் வளரும்? மாறாக, இப்பகுதியிலுள்ள சபைகளும் மற்றும் பிரசங்கியார்களும் ஒருவரோடொருவர் ஐக்கியம் கொண்டு, ஒருவருக்கொருவர் உதவிசெய்து, மற்றவர்களுடைய சுவிசேஷக் கூட்டங்களில் கலந்துகொண்டு, தங்களால் இயன்ற உதவியை செய்யவேண்டுமென்றே தேவன் அவர்களிடத்தில் எதிர்பார்க்கிறார்

ஒரு பிராந்திய சபை, மற்றொரு பிராந்திய சபை என்னசெய்யவேண்டும் என்ன செய்யக் கூடாதென்றும் கட்டளையிட அதிகாரமில்லை என்பது உண்மைதான். ஆனால் மற்ற பிராந்திய சபையினுடைய சுதந்திரத்தை ஒரு பிராந்திய சபை புரிந்து கொள்ளும்வரை இரண்டு பிராந்திய சபைகளும் ஒருமித்து பணிபுரிவதே சரியானதாகவும், ஒழுங்கானதாகவும் இருக்கும். இக்காரியம் புதிய ஏற்பாட்டில் போதிக்கப்படுகிறது.

ஒரு தனிப்பட்ட அங்கத்தினரிடமோ, அல்லது மற்ற பிராந்திய சபையிடமோ கருத்துவேறுபாடு இருக்குமானால், அந்த நபரிடமோ அந்த சபையாரிடமோ, பிரச்சனையைத் தீர்க்கவேண்டும் என்ற ஆவலுடன் நாம் அனுக வேண்டும்.உபதேசக்கோட்பாட்டில் பிரச்சினை வரும்போது, வேதாகமத்திற்குச் சென்று, அது என்ன போதிக்கிறது என்பதைக் கண்டு அதின் அடிப்படையில் நடக்கவேண்டும். தேவனுக்கு முன்பாக சரியான காரியங்களைச் செய்யவதற்கும் கர்த்தருடைய மக்களோடு ஒற்றுமையைக் காப்பதற்கும் என்னவெல்லாம் செய்யவேண்டுமோ, அதை மிகுந்த ஆவலோடும், ஜெபத்தோடும் செய்யவேண்டும். நாம் ஒரு காரியத்தை குறித்து எரிச்சலுள்ளவர்களாகி, மற்றவர்களின் மனதை புண்படுத்தவோ, அல்லது மற்ற பிராந்திய சபையை வேண்டுமென்றே எதிர்த்து நிற்கவும் கூடாது. வருகின்ற சிறு,சிறு பிரச்சினைக்கெல்லாம் சலித்துக்கொண்டு சபை அலுவல் கூட்டத்திலிருந்து வெளியேறுவதும் நழுவிக்கொள்வதும் அல்லது வேண்டுமென்றே விலகி நிற்பதும் கூடாது.மாறாக நாம் பிரச்சினையைச் சரி செய்வதில் ஆவலுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

ஒரு பிராந்திய சபையானது தன் அங்கத்தினர்களை, அப்பகுதியிலுள்ள மற்ற சபையின் அங்கத்தினர்களோடு சேர்ந்து தேவனுக்காய் செயல்பட ஊக்கப்படுத்தவேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் சகோதர, சகோதரிகளென்றும், உலகின் பிற மக்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது எண்ணிக்கையில் குறைந்தவர்களாய் இருக்கிறோம் என்பதையும் உணர்ந்து கர்த்தருக்காய் ஒற்றுமையுடன் செயல்படவேண்டும். உலகிற்கு சுவிஷேத்தையும் ஆண்டவருக்காக வாழவேண்டும் என்பதையும் எடுத்துச் சொல்லுகின்ற பெரும்பணி நமக்கு முன்பாக இருக்கிறது என்பதையும் உணர வேண்டும். நாம் ஒற்றுமையாய் இருப்பதினாலே இப்பெரும்பணியைச்செய்வதற்கு வேண்டிய பலன் நமக்கு எளிதில் கிட்டும். அதுமாத்திரமல்லாமல், கர்த்தருடைய சித்தத்தை செய்ய முயலும்போது ஆண்டவரும் நம்மோடே கூட இருப்பார்.

நாம் இங்கே ஒற்றுமையைக் குறித்து பேசுவதினால் அல்லது படித்துக்கொண்டிருப்பதினால், இத்தருணத்தை பயன்படுத்தி உங்களிடம் ஒரு வினாத்தொடுக்க ஆசைப்படுகிறேன். அது என்னவென்றால், ஒற்றுமையைக் குறித்து உங்கள புரிந்து கொள்ளுதல் என்ன?எல்லா பிரிவினரும் தாங்கள் விரும்புவதை நம்புவதற்கு உரிமைஉண்டென்று நீங்கள் நம்புகிறீர்களா? ஆனால் இப்படி செய்துகொண்டே பொதுவாக எல்லோரும் ஒற்றுமையாய் இருக்கமுடியும். அதாவது கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் என்பதில் மாத்திரம் ஒற்றுமையாய் இருக்கமுடியும் என்பதையும் நம்புகிறீர்களா? நீங்கள் ஒரு பிரிவினைச்சபையின் அங்கத்தினரா உங்கள் சபையைக் குறித்து வேதத்தில் வாசிக்க முடியுமா? ஒரு வேளை நீங்கள் என்னை பார்த்து ஒரு கேள்வியைக் கேட்கலாம்.

நாங்கள் கிறிஸ்துவை நம்பும்பொழுது, இவ்வேறுபாடுகளெல்லாம் ஒரு பொருட்டல்லவே என்று. உங்கள் கேள்வியிலேயே பதில் இருக்கிறது பாருங்கள். நீங்கள் கிறிஸ்துவை நம்பினால், கிறிஸ்து நீங்கள் எதைச்செய்யவேண்டுமென்று விரும்புகின்றாரோ அதையே நீங்கள் செய்யவேண்டும் என்று விரும்புவீர்கள். கிறிஸ்துவின் ஜெபத்தில், அவர் நாமெல்லாரும் ஒன்றாய் இருக்கவேண்டும் என்பதற்காய் ஜெபித்தார் என்பதைப் பற்றி படித்தோம். ஆண்டவர் பிரிவினையை கண்டனம் பண்ணுகிறார் என்பதற்கு வேத வசனங்களையும் மேற்கோளிட்டுக் காட்டினோம். நாம் கிறிஸ்துவை நம்புகிறோம் என்று சொல்லிக்கொண்டு, அவர் எதிர்க்கிற காரியங்களை நாம் எப்படி செய்யமுடியும்? அவருடைய சபையின் அங்கத்தினாராய் இல்லாதபோது நாம் எப்படி அவரை நம்ப முடியும்? அவரது குடும்பமாகிய சபையில் நாம் ஒரு அங்கமாக இடம்பெறாதபோதும், கர்த்தரோடு மாறுபடும்போது நாம் எப்படி எதிர்பார்க்கிறாரோ, அதைச்செய்ய நான் உங்களை ஊக்கப்படுத்துகிறேன். பரலோகம் செல்லமுடியும்? அருமை நண்பர்களே! இவைகளைக் குறித்து நீங்கள் மீண்டும் யோசிக்கும்படியாக கெஞ்சுகிறேன். நான் இங்கு என் சபையை அல்லது என் மதத்தை அல்லது மற்ற எதையாகிலும் கட்டாயமாகத் திணிக்க முயற்சிக்கவில்லை. ஆனால் நாம் கர்த்தருக்குக் கீழ்படியவேண்டுமென்பதிலும் அவர் நம்மை என்ன செய்ய சபைகளுக்குப்போலவே, என் சகோதரரே உங்களுக்கும் சொல்லுகிறேன், ஒரு குறிப்பிட்ட பகுதியிலேயோ அல்லது வேறு விதமாகவோ நாம் பிரிந்து நின்று விட்டு, ஆண்டவரால் ஏற்றுக்கொள்ள பட்டவர்களாகவும் இருக்கமுடியாது.

நாம் ஒரே காரியத்தைக் குறித்துப் பேசவும், ஒரே காரியத்தை செய்யவும் வேண்டுமென்றே ஆண்டவரும் விரும்புகிறார். அவரது சரீரத்தில், அதாவது ஆவிக்குரிய சரீரத்தில் அவருடைய குடும்பத்தில், ஒற்றுமையாய், ஒரு கூட்டமக்களாய்த் திகழவேண்டுமென்றும் அவர் ஆசைப்படுகிறார். பவுல் எபேசு சபைக்கு எழுதியதை நினைவில் காள்ளுங்கள். ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தி யென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனதாழ்மையும் சா மும் நீடிய பொறுமையும் உடையவர்களாய் அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானகட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல ஒரே சரீரமும் ஒரே ஆவியுமுண்டு. ஒரே கர்த்தரும் ஒரே விசுவாசமும் ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு. அவர் எல்லோர்மேலும் எல்லாரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர், என்று கூறுகிறார் (எபே.4:1-6)

ஆராதிக்கும்போதும், பிரசங்கிக்கும்போதும், தனிநபர் உறவிலும், இந்ந லகில் நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து மிகப்பெரிய காரியத்தைச் செய் றோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் பார்த்த இந்த காரி ங்கள் உங்களுக்கு பிரயோஜனமாய் இருந்திருக்கும் என நம் றேன். மீதி காரியங்களை தொடர்ந்து அடுத்த மாதம் பார்ப்போம்.

J.C CHOATE J.C. சோட்

## கொரிந்து பட்டணத்தைக் குறித்து.....

ஏறக்குறைய கி.மு.1350 வது ஆண்டில், முதன்முதலில் இப்பட்டணம் நிறுவப்பட்டது. கிரேக்க நாட்டின் பழம்பெரும் பட்டணங்களில் சிறப்பு வாய்ந்த ஒரு பட்டணம் விளங்கியது. ரோமா பேரரசால் கி.மு. 146ம் ஆண்டில் இப்பட்டணம் ஆக்கிரமிக்கப்பட்டு, முழுமையாய் அழிக்கப்பட்டது. பிற்பாடு 100 வருடங்கள் கழித்த ஜீலியஸ் சீசர் என்ற பேரரசரால் கி.மு. 46வது ஆண்டில் மீண்டும் இப்பட்டணம் ரோமர் காலனியாக கட்டப்பட்டது. அவ்விடத்தில் இராணுவ வீரர்களையும் தளபதிகளையும் குடியேற்றினர். இச்சக்கரவர்த்தி பின்னாட்களில் அகஸ்டல் சீசர் என்றும் சக்கரவர்த்தியால் இப்பட்டணம் அகாயா நாட்டில் தலைநகரமாயிற்று.

****

பெண்கள் பகுதி

# தாய்

தன் பிள்ளைகளின் படங்கள் அடங்கிய ஆல்பம் அவள் மடியில் திறந்த வைக்கப்பட்டிருந்தது. தன்னுடைய ஒவ்வொரு பிள்ளைகளுடைய படங்களையும் பார்க்கும்போது தன்னுடைய விலைமதிக்கமுடியாத அந்த தாய்மை நிலையை எண்ணிப்பார்த்தாள். இவ்வளவு காலமும் அவளுக்கு நன்மையாகவே இருந்தது. நல்ல கணவன். அழகான குழந்தைகள், இப்போது பேரக்குழந்தைகளைக் காணும் பாக்கியத்தையும் தேவன் அவளுக்கு கொடுக்கிறார். தன் முதல் குழுந்தை பிறந்தபோது அவள் எப்படி ஒரு அனுபவமற்றவளாக இருந்தாள். அந்த இக்கட்டான காலங்களில் தேவன் தனக்கு வழிக்காட்டியாய் இருந்ததை நினைத்து எவ்வளவு நன்றியுள்ளவளாக இருப்பாள்.

அவள் தனக்குத் தானே கேள்விகளை எழுப்ப ஆரம்பித்தாள். தான் எப்படி ஒரு தாயாக முதிர்ந்தாள்? முதல் குழந்தை பிறந்தபோது இருந்ததை விட இப்போது கடைசி குழந்தை பிறக்கும்போது எந்தளவுச் சிறந்த தாயாக இருக்கிறாளா? தேவன் எதைச் செய்யவேண்டும் என்று சொன்னதை அவள் அறிந்திருந்தபடியால் என்னென்ன குறைபாடுகளையெல்லாம் தான் களைந்தாள் என்று வாழ்க்கை அவளுக்கு நன்றாக இருந்தது. ஏனென்றல் தேவன் நல்லவராக இருந்தார்.

நம்முடைய மொழிகளிலேயே வைத்து பார்த்தால் **தாய்** என்ற வார்த்தை மிகவும் மென்மைத் தன்மை வாய்ந்தது. இந்த வார்த்தைக்கு ஒரு திட்டமாக, தெளிவான ஒரே அர்த்தம் கொடுக்க இயலாது. நாம் எவ்வாறு சொல்லாமென்றால் இது பெண்களுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட ஒரு ஆசீர்வாதம். இது அவளுக்கும் அவள் பெற்றெடுக்கும் பிள்ளைக்கும் சொந்தமானது.

அவளுக்கென்ற கொடுக்கப்பட்டுள்ள சிலாக்கியம் மற்றொரு சிருஷ்டியோடு இணைந்துபோய் வேறொரு புதிய ஆண்மாவை உலகுக்கு கொண்டுவருவது. இது மனித சிருஷ்டிப்பு தேவ சிருஷ்டிப்புக்கு அருகில் வருவதைபோல்தோன்றுகிறது. தேவன் சிருஷ்டித்தைப்போல் மனிதன் எப்போதும், ஒருக்காலும் ஒன்றை உண்டுபண்ண முடியாது.

அது அவருக்கே உரித்தான உரிமையாகும். ஆனால் தேவன் இந்த உரிமையில் கொஞ்சம் பங்குபெற பெண்களுக்கு வாய்ப்பு அளித்துள்ளார். இதற்காக அவள் காலமெல்லாம் நன்றியுள்ளவாக இருக்கவேண்டும்.

அநேகமாக எல்லா நற்செயல்களில் உயிராக ஒரு பெண் விளங்குகிறாள். ஒரு பிள்ளையை உருவாக்குவதில் தாயை தவிர மற்ற எவருக்கும் அதில் அவ்வளவு பங்கு இல்லை. ஒருவேளை தகப்பன், வேதாகமபள்ளி, சபை, பள்ளிக்கூடம் போன்றவற்றிக்கும் பங்கு இருக்கலாம். ஆனால் முதன் முதலாக அறிவு என்னும் விதை தாயால் மாத்திரமே அந்த குழந்தைக்கு கொடுக்கஇயலும். ஆனால் மிகவும் கவலைக்குரிய செய்தியாதெனில் தாய்மார்களாகிய நாம் நம் பிள்ளைகள் பெரியவர்களாகட்டும் பிறகு அவர்களுக்கு போதிக்கலாம் என்று விட்டுவிடுகிறோம்.

ஒவ்வொரு தாய்க்கும் தன் பிள்ளைகளை பற்றியதான கற்பனைகள் இருக்கும். அந்த கற்பனை தாய்க்குத்தாய் வேறுபாடும். அன்னாள் தன் பிள்ளையை தேவனுக்கு பணிவிடைசெய்பவனாக நினைத்து கற்பனைசெய்தாள். பத்சேபாள் தன் மகன் ராஜாவாக வரவேண்டும் என கற்பனை செய்தாள். ஆனால் பொதுவாக எல்லாத் தாய்மார்களும் தன் பிள்ளைகள், திறமையானவர்களாக, சுய திருப்தியோடு மகிழ்ச்சியானவர்களாக இருக்கவேண்டும் என்று விரும்புகின்றனர்.

தாய்மார்களாக இருக்கும் நாம் இன்றைக்கு வாழவேண்டும். நேற்றைய துன்பங்களை கடனாக வாங்க கூடாது அல்லத நாளையை ப்பற்றியும் கவலைப்படகூடாது. தேவனால் கொடுக்கப்படும் ஒவ்வெரு நாளையும் ஒவ்வொரு மணித்துளியையும் பயன்படுத்த கற்றுகொள்ளவேண்டும். ஒவ்வொரு தாய்மாரின் குறிக்கோள் இதுவாக இருக்கவேண்டுமென்றால் **நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையும்குறித்துஉங்கள விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோட கூடிய ஜெபத்தினாலம், வேண்டுதலினாலும் தேவனுக்குத்தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாபுத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளும்.** (பிலி.4:6,7).

பிள்ளைவளர்ப்பிலே நேரம் ஒரு முக்கிய பங்காகையால் தேவையற்ற கவலையால் நேரத்தை வீணடிக்க கூடாது. கவலை என்பது வீணாவது, தேவையற்றது, அவசியமற்றது. அதை விடுவித்து, செயல்படுவது முக்கியமானது.

ஒரு தாய் இருக்கவேண்டிய முதல் படி எதுவென்றால், தான் ஒரு கிறிஸ்தவளாக இருக்கவேண்டும் என்பதே.

நாம் வசனத்தை கேள்விபடாமல், விசுவாசிக்காமல் மனந்திருந்தாமல், அறிக்கையிடாமல், ஞானஸ்நானம் எடுக்காமல் இருந்தால் நாம் அசையும் அஸ்திபாரத்தின்மேல் நம் பிள்ளைகளை கட்டுகிறவர்களாயிருப்போம். நாம் நம்பிக்கையாய் இருக்க வேண்டும். நாம் குறைந்த விசுவாசமுள்ளவாராகயிருந்து கொண்டு நம் பிள்ளைகளிடத்தில் அதிக விசுவாசத்தை எதிர்பார்க்க இயலாது.

**தேவன் மீதும் தேவனுடைய சபைமீதும் போதுமான அளவு ஈடுபாடு உள்ளவாளாக இருக்கவேண்டும்.**

முழு குடும்பத்தின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு தாய் தான் பொறுப்பாகிறாள். குடும்ப ஜெபம், வேதபாட வகுப்பு ஆகிய காரியங்களில் பங்கேற்பதற்கு நேரத்தை ஒதுக்குபவள் தாயாகதான் இருக்கவேண்டும். சரியான நேரத்திற்கு ஞாயிறு ஆராதனையில் கலந்து கொள்ளவேண்டும். சரியான நேரத்திற்கு நாம் எழுந்திரிக்காமல், பிள்ளைகளை அவசரப்படுத்தி ஆராதனைக்கோ, வேதாகம வகுப்புக்கோ அனுப்பசெய்யும்போது எவ்வாறு அவர்கள் அமைதியான, பங்குவமான மனதுடன் அதில் கலந்துக்கொள்ளஇயலும்? ஒரு தாய் தன் அன்றாட வழிகாட்டியாக வேதாகமத்தை பயன்படுத்தவேண்டும். நல்ல கிறிஸ்துவ இதழ்களை குடும்பத்தில் உள்ளவர்களை படிக்க செய்யவேண்டும்.

தேவன் நமக்காக ஒரு திட்டமான வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார். நம்முடைய பிள்ளைகளை சரியான வழியிலே வளர்த்து விட்டோமென்றால் அவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றி பயப்பட தேவையில்லை. **பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.(நீதி.22: 6).**

ஒரு தாயானவள் தன்குழந்தைக்ளின் சரீர நலனில் கரிசனையுள்ளவளாக இருக்கவேண்டும்

லூக்கா 2:52 ல் வாசிக்கிறோம். **இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர்தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்.** மேற்சொன்ன காரியங்களில் யோசேப்பும், மரியாளும் தங்கள் பிள்ளையாகிய இயேசுவை வளர்த்திருப்பார்களானால் நாமும் நம்முடைய பிள்ளைகளை அப்படியே வளர்க்க வேண்டும். குழந்தைகளின்

சரீர நலன் மிகமிக முக்கியமானது. குழந்தைகளாய் இருக்கும்போதும், பெரியவர்களாகும்போதும் தாயின் பொறுப்பு அதிகமாகிறது. 1.கொரி.3:16-ல் கூறியபடி நம்முடைய சரீரம் தேவனுடைய ஆலயமாய் இருக்கிற்து என்பதை மறந்துவிடகூடாது.ஒரு தாய் தன் குழந்தையினுடைய அறிவுதிறன் வளர்ச்சியில் ஆர்வம் காட்டவேண்டும். தன் பிள்ளைகள் தங்கள் நேரத்தை சரியான வழியில் செலவு செய்கிறார்களா என்பதை கவனிக்கவேண்டும்.

**ஒரு தாய் தன் பிள்ளைகளுக்கு பொறுப்புகளை கற்றுத்தரவேண்டும்**

இன்றைக்கு நாம் பிள்ளைகளுக்கு பல சலுகைகளைச் செய்து அவர்களை பொறுப்பற்றவர்களாக மாற்றிவிடுகிறோம். நிறைய வாலிபமக்கள் வேலைசெய்வது என்றால் என்ன என்பது கூட தெரியாமல் உள்ளார்கள்.அவர்களுக்கு நாம் கொடுக்கும் வேலைகள் அவர்களுக்கு ஒரு சவாலாக அமையும். தன் பொறுப்பை உணர்ந்து செயல்படும்போது அவர்களை பாரட்டவேண்டும். பொறுப்புகளை கற்றுக்கொடுக்கும்போது ஒழுக்கங்களையும் கற்றுத்தரவேண்டும். இந்த வேளைசெய்வது தாயின் கையில்தான் உள்ளது. கோபத்தோடோ அல்லது பெற்றோரின் சுய திருப்திக்காகவோ இதை செய்யக்கூடாது. அன்பு இல்லாமல் ஒழுங்கு படுத்துவது கொடுமையானது. ஒழுக்கம் இல்லாத அன்பு முட்டாள்தனமானது. ஒழுங்கான பிள்ளைகள் தான் பெற்றோருக்கு மகிமை. ***உன் மகனை சிட்சைசெய், அவன் உனக்கு ஆறுதல் செய்வான், உன் ஆத்துமாவுக்கு ஆனந்தத்தையும் உண்டாக்குவான்.*** *(நீதி.29:17)*

**ஒரு தாயானவள் தன் எல்லாக் குழந்தைகளையும் தனித்தனியே அக்கறை செலுத்தி கவனிக்கவேண்டும்**

ஒருவேளை ஒன்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளால் தேவன் நம்மை ஆசீர்வதித்திருக்கலாம். ஆனால் ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள். தனிநபர்கள் ஒவ்வொரு குழந்தையையும் நாம் அவர்களுக்குதான், அவர்களுக்கு மட்டும்தான்சொந்தம் என எண்ணுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கென்று நேரத்தை ஒதுக்கி அவர்களின் நலனில் அக்கறைக்கொள்ளவேண்டும்.ஒவ்வொரு குழந்தையும் தனக்கு தேவையானபோது அம்மா தனக்கு இருக்கிறார்கள் என்ற உணர்வோடு இருக்கவேண்டும். தாய்தான் அவர்களுக்கு அன்பு செலுத்துபவள், முக்கியமானவள், பாதுகாப்பானவள்.

## ஒரு தாய் தான் ஒரு மனைவி என்பதையும் நினைக்கவேண்டும்

தாய்மைத்துவத்தின் சுமையானது பல சமயங்களில் நாம் மனைவியாய் இருக்கிறோம் என்பதை மறந்துவிடச்செய்கிறது. நாம் நம் கணவனில் அன்பு கூறவேண்டும். அந்த அன்பை பிள்ளைகள் அறிந்துவிடுவார்களோ என வெட்கப்படகூடாது. அவர் ஒரு நல்ல தகப்பனாக இருப்பதற்கு நாம் தான் உதவிசெய்யவேண்டும். ஏனென்றால் அதிகநேரத்தை பிள்ளைகளோடு அவரால் செலவழிக்கமுடியாத துர்பாக்கியநிலை அவருக்கு. பெற்றோர்கள் இருவருமே பிள்ளைகளை வளர்ப்பதற்காக பொறுப்பை பகிர்ந்து செய்யவேண்டும்.


நம்முடைய கணவன்மார்களை ஏதாவது குறைகூறுவோமானால் அதை ஒருபோதும் நம்பிள்ளைகளுக்கு சொல்லகூடாது. பிள்ளைகளை வைத்துக்கொண்டு குடும்பப்பிரச்சனைகளை பேசக்கூடாது. அவைகளை அவர்கள் எளிதில் மறக்கமாட்டார்கள்.

ஒரு தாயாகவும், மனைவியாகவும் இருந்து செயல்படுதல் என்பது பெரிய பொறுப்புள்ள காரியமாகும். பிள்ளைகளை பராமரித்தல், கற்றுக்கொடுத்தல் போன்ற வேலைகளை செய்துகொண்டு நம்முடைய துணையாகிய கணவரை மறந்துவிடகூடாது.தாய்மைத்துவம் என்பது சிலாக்கியமான ஒன்று. ஆதியிலிருந்து பெண்களின் தாக்கம் குறித்து வேதாகம சரித்திரத்தில் படித்திருக்கிறோம். நம் சொந்த வாழ்க்கையே மனிதரின் பார்வையிலும், தேவனுடைய பார்வையிலும் தகுதிவாய்ந்ததாக அமையவேண்டும். தாயாக இருக்கும் நமக்கு பெரிதும் உதவுவது ஜெபம் ஆகும். தேவனுக்கும் நமக்கும் இடையேயுள்ள உறவு சரியாக இருந்தால்தான் தேவுன் விரும்பும் காரியங்களை செய்யமுடியும். ஒவ்வொருநாளும் அவருடைய வார்த்தைகளை, படித்து தியானித்து, பிறகு, ஞானத்திற்காகவும், பெலத்திற்காகவும், தைரியத்திற்காகவும் ஜெபிக்கவேண்டும். அப்போது நம்முடைய பிள்ளைகள் எழும்பி நம்மை **பாக்கியவதி** என்பார்கள்.

தாய்மைத்துவம் என்பது சிலாக்கியமான ஒன்று. ஆதியிலிருந்து பெண்களின் தாக்கம் குறித்து வேதாகம சரித்திரத்தில் படித்திருக்கிறோம். நம் சொந்த வாழ்க்கையே மனிதரின் பார்வையிலும், தேவனுடைய பார்வையிலும் தகுதிவாய்ந்ததாக அமையவேண்டும். தாயாக இருக்கும் நமக்கு பெரிதும் உதவுவத் ஜெபம் ஆகும். தேவனுக்கும் நமக்கும் இடையேயுள்ள உறவு சரியாக இருந்தால்தான் தேவன் விரும்பும் காரியங்களை செய்யமுடியும். ஒவ்வொருநாளும் அவருடைய வார்த்தைகளை, படித்து தியானித்து, பிறகு, ஞானத்திற்காகவும், பெலத்திற்காகவும், தைரியத்திற்காகவும் ஜெபிக்கவேண்டும். அப்போது நம்முடைய பிள்ளைகள் எழும்பி நம்மை**பாக்கியவதி** என்பார்கள்.

**R.R. நாயகம்**

வாலிபர் பகுதி



# அரசனின் ஆலோசனைகள்

தேவன் பாராட்டின எல்லையில்லா கிருபையினால் அவர் படைத்த காலஅளவில் அதிகபட்சமான ஒருவருடத்தை கடந்து புதுவருடத்திற்குள், நூற்றாண்டின் நுழைவாயிலுக்குள், ஆயிரமாண்டின் அலங்கார வாசலுக்குள் புகுந்து இருக்கும் நாம், அந்த தயாள தேவனின் கரத்திலிருந்து சிறப்பான நன்மைகளை பெற்றிருக்கிறோம் என்ற சிந்தையுடன் அவரின் எதிர்பார்ப்பின் படி வாழ எத்தனிக்கிறோமா? என்ற வினாவைகேட்டு, நம் இளம்உள்ளங்களில் இவ்வினாவிற்கு வேதத்தின் அடிப்படையில் என்ன விடை காண்கின்றோம் என்பதை அறிந்துகொள்ள, கர்ஜித்துவந்த இளஞ்சிங்கத்தின் வாயை, கர்த்தரின் பெலன்கொண்டு கிழித்துப்போட்ட தாவீது இராஜாவின் சங்கீதத்திலிருந்து சில ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வோம்.

## உங்கள் வழிகளை சிந்தியுங்கள்

தன் தகப்பனுக்கு கடைசி குமாரனாகப் பிறந்த தாவீது, யூதாகோத்திரத்தின் முதல் இராஜாவாக முடிசூடப்பட்டான். அவ்வரசன் பரிசுத்த ஆவியானவரால் அருளப்பட்டு எழுதின சங்கீதப்புத்தகத்தில் இப்படியாய் இயம்புகிறான். *என் வழிகளை சிந்தித்து கொண்டு, என் கால்களை உம்முடைய சாட்சிகளுக்கு நேராகத் திருப்பினேன். உமது .கற்பனைகளைக் கைக்கொள்ளும்படி, நான் தாமதியாமல் தீவிரித்தேன்* (சங்.119: 59,60). அரசனாகிய அவர் தன் வழி தேவனுக்கு முன்பாக சரியானவழியா? என்றும் படைக்கப்பட்ட வஸ்துவாகிய அவர் தன்னை விசித்திர வினோதமாய் உருவாக்கின குயவனுக்கு பாத்திரமானவனாய் நடந்துகொள்கிறேனா? என்றும் தன் உள்ளத்தில் வினா எழுப்பியிருக்கின்றான்.

அநேக நேரம் வாலிபர்களாகிய நாம் என் வாழ்வில் சமாதானம் இல்லையே, என் பாதை எல்லாம் சஞ்சலத்தினாலே நிறைந்திருக்கிறதே, என்மீது அன்பு வைப்போரெல்லாம் திடீரென்று என்னை தனியாய் விட்டுவிடுகிறார்களே என்றெல்லாம் ஏங்குகின்றோம். கர்ததர் சாலமோனைக் கொண்டு சொல்வதை க் கவனியுங்கள். *உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்: அப்பொழுது அவர்உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்* (நீதி.3:6). இளைஞர்களாகிய நாம் அறிந்து கொள்ளவேண்டிய மற்றொருகாரியம் என்னவென்றால் *கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்* (எரேமியா.10:23). இப்படி அறிந்துகொண்ட நாம் கர்த்தராலே

நம்முடைய நடைகள் ஸ்திரப்படுத்தப்படுவேண்டும் என்ற வாஞ்சை கொண்டு நம்முடைய வழிகள் அதற்கு ஏற்றதாய் அமையவேண்டுமென அவரிடம் விண்ணப்பிக்கவேண்டியதும் அதை செயல்படுத்த நாம் முயற்சிசெய்வதும் அவசியம். அப்படி செய்யும்போது நம்முடைய பிரயாசத்தை அவர்வாய்க்கப்பண்ணுவார் என்பதில் ஐயமில்லை.

நம்முடைய நடை எவ்வழியாய் போகிறது. மனம் விரும்பி இடத்திற்கெல்லாம் கால்கள், கடிகாரத்தின் நொடி முள்ளைப்போல் நிற்காமல் ஓடிக்கொண்டிருக்கின்றதே? பாவம் செய்ய நம்முடைய கால் தீவிரிக்கின்றதோ? வாலிபனே! இது முதலில் செம்மையாகவே தோன்றும். ஆனால் இதன் முடிவோ மரணம். (நீதி.16:25) இங்கே மரணம் என்பதுதேவனை விட்டு பிரித்து இருக்கின்ற நித்திய ஆவிக்குரிய மரணத்தைக்குறிக்கும்.

இவ்வருடத்தில் முதல் மாதத்தில் இருக்கும் நாம் நம்வழிகள் சர்வவல்லவருடைய சித்தத்தின்படி இருக்கிறதா என்று ஆராய்ந்து, தாவீது செய்ததைப்போல நம் வழிகளை சிந்தித்துக்கொள்வோம். நாம் அவருடைய வழியில் நடக்கும்போது கைவிடாத கர்த்தர் உலகத்தின் முடிவுபரியந்தம் நம்மோடுகூட இருப்பார்.

## அவருடைய சாட்சிகளுக்கு நேராய் திரும்புவோம்

அருமையான வாலிப நண்பர்களே! இவ்வரசன் இரண்டாவதாக நம் முன் வைக்கின்ற ஆலோசனை என்னவென்றால் தன் வழிகளை சிந்தித்துக்கொண்ட அவன் அத்தோடு நிறுத்தாமல் தன் கால்களை பரம தந்தையினுடைய சாட்சிகளுக்கு நேராக திருப்பியதன் மூலம், தன் செயல்பாட்டையும் வெளிப்படுத்துகிறான். பதவியும், செல்வமும் , செல்வாக்கும், சொல்வாக்கும்,மாட மாளிகையும் , தன் அழைப்பின் தொனிகேட்டு சிட்டாய் பறந்துவரும் சிப்பாய்களும், இட்ட கட்டளையை தேனிபோல் சுழன்று செய்துமுடிக்க தளபதிகளும், சிங்காரமாய் வீற்றிருந்து, மக்களை ஒய்யாரமாக ஆட்சி செய்ய சிங்காசனமும் ஆட்சியின் பளு அதிகரித்துவிட்டால், சற்று ஓய்வாய் சுற்றித்திரியமலர்வனமும் தனக்கு இருந்தபோதிலும், தலைகனம் பிடித்தவனாய் எனக்கு எல்லா வசதிகளும் இருக்கிறது யார் என்னை அசைக்கமுடியும் என்றெல்லாம் எண்ணாமல் ஆடுமேய்த்த என்னை அரசனாக்கிய தேவனுடைய வழிகளில் அவர் எதிர்பார்க்கிற வண்ணம் நடக்கின்றேனா என்று சிந்தித்து செயல்பட்டும் இருக்கின்றான்.

வாலிபர்களாகிய நாம், அநேக் முறை நம் வழிகளைக் குறித்து சிந்திக்கின்றோம், ஆனால் அதுவே போதும் என்றும், நம்மால் இதையாகிலும் செய்யமுடிகிறதே என்றும் திருப்திபட்டுக்கொள்கிறோம். ஆனால் இளைஞர்களாகிய நாம் ***தேவனுடைய வழி உத்தமமானது: கர்த்தருடைய***

***வசனம் புடமிடப்பட்டது; தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார்*** (சங்.18:30) என்பதை அறிந்து அவருடைய உத்தமமான வழிகளில் நம்மை உயிர்ப்பிக்கும்படி விண்ணப்பித்து அதன் மூலம் அவரை நாம் கேடகமாக பெற்றுக்கொள்ளவேண்டியது அவசியம்.

நண்பர்களே! அகிலத்தையும் ஆகாயத்தையும் அண்டசராசரங்களையும் படைத்த ஆண்டவர், நமக்காக தன் அந்தஸ்தையும், மகிமையையும் துறந்து நம்மை மீட்பதற்காக தன் ஜீவனையும் ஈந்துவிட்டு அவர் நம்மிடம் கேட்பதெல்லாம், என் வழிகளை காத்துக்கொண்டால் மகனே, உன்னை இம்மையிலும், மறுமையிலும் காப்பேன், என்கிறார். உயர்ந்த உயிர்தியாகத்தை செய்து அவரின் சொல் கேட்டு, அவர் இருதயத்திற்கேற்ற தாசனைப்போல் ***வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்*** (சங்.139:24) என்று அவரின் தயவுள்ள கைகளில் ஒப்புக்கொடுப்போமாக, அப்படிச்செய்தால் நிச்சயம் அவர் நம்மை காப்பார் என்பது உறுதி.

## தாமதியாமல் தீவிரிப்போம்

கர்த்தரின் ஆலயத்தைத் தன் மகன் அலங்காரமாய் கட்டவேண்டும் என்பதற்காய் பொன்னையும், ஆபரணங்களையும் அநேகமாய் சவதரித்து வைத்த சௌந்தர்யவனாகிய தாவீது தன் வழிகளில் தேவனுடைய கற்பனையைக் கைகொண்டு நடக்கவேண்டும் என்பதில் தாமதிக்கிறவனாயிராமல், அதாவது, தன் தாமதத்திற்கு காரணம் ஒன்று கண்டுப்பிடித்து, சாக்குபோக்குகளை சொல்லி சமாளித்து தேவனை நமக்கு வேண்டிய நேரம் தேடிக்கொள்வோம் என மேட்டிமையான எண்ணம் கொள்ளாமல் ஒரு பேருண்மையை உணர்ந்தவனாய் தீவிரித்தான்.

வாலிபர்களாகிய நாம் உடனே அவன் என்ன பேருண்மையை உணர்ந்திருந்தான் என்பதை அறிய ஆவலாயிருப்போம். அவனே அதை சொல்லியிருக்கிறான் கேளுங்கள். ***மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது: வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறான். காற்று அதின்மேல் வீசினவுடனே அது இல்லாமற்போயிற்று; அது இருந்த இடமும் இனி அதை அறியாது.*** (சங்103:15,16) யோபுவின் புத்தகத்திலும் மனிதனுடைய வாழ்க்கை அஞ்சல்காரர் ஓட்டத்தைவிட அதிகவேகமாய் ஓடுமென்று அறிகிறோம்.(யோபு.9:25) நிலையில்லா இவ்வாழ்வில், மரணம் நம்மை எப்பொழுது சந்திக்கும் என்பது மறைக்கப்பட்டிருப்பதினால் ஆபத்தை நோக்கி தீவிரமாய் அடிமேல் அடி வைக்காமல் பவுலின் அறிவுரை கேட்டு இப்பொழுதே அநுக்கிரகக் காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள் (2.கொரி.6:2) என்பதை உணர்ந்து அவரை அண்டிக்கொள்வோமாக. வேதாகம ஞான இலக்கியத்தில் ஒரு முத்திரைப்பதித்த ஞானியின் புத்தகமாகிய நீதிமொழிகளில் **கர்த்தருடைய நாமம் பலத்த துருகம் நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்** (நீதி.18:10) என்ற ஓர் ஞான நன்மையை

நமக்கு முன் வைக்கிறார். நீதிமான் அதற்குள் சுகமாயிருப்பான் என்று சொல்லாமல், ஓடிச் சுகமாருப்பான் என்று அவசர நடவடிக்கையைக் காட்டுகிறார் ஞானி. நாம் அதை உணர்ந்து கர்த்தருடைய நாமமாகிய அக்கொத்தளத்திற்குள் குடிபுகுந்து நம்முடைய குடியிருப்பாகிய பொற்றளமிகு பரலோகத்தில் சேருவோமாக.

## கற்பனைகளைக் கைக்கொள்வோம்

இறைமகன் இயேசுவையே இவ்வரசனின் மகனென்று அழைக்கும்படியாய் யூதர்கள் முன் உயர்ந்த நின்ற யூதர்குலத்து முதல் வனாம் ஈசாயின் மகன் தாவீது விளம்பும் போது, ***உமது கற்பனைகளைக் கைக்கொள்ளும்படி தாமதியாமல் தீவிரித்தேன் என்கிறான்.***(சங்.119:59,60) நாம் தீவிரமா செயல்படவேண்டுமென்று கண்டறிந்தோம். ஆனால் என்ன செய்யவேண்டும் என்பதையும் இவ்வரசன் நமக்கு முன் வைக்கிறான் பாருங்கள். அவருடைய கற்பனைகளை கைக்கொண்டு நடப்பதே அச்செயலாம்.

அநேகருடைய மனதில் பாதகப்பிசாசானவன் கர்த்தருடைய கற்பனைகள் கைகொள்வதற்கு மிகவும் பாரமானவைகள் என்று ஒரு அடிவாரம் போட்டு அவர்களை கடிவாளம்கொண்டு இழுப்பதுபோல் கட்டிவைத்திருக்கிறான். ஆனால் தனக்கு அன்பான சீஷனைக்கொண்டு ஆண்டவர் சொல்வதைக் கேளுங்கள் ***நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூறுவதாம். அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல.***(1.யோ.5:3) தேவனுடைய வசனம் விளம்புவதை பார்த்தீர்களா? ஆதிமுதல் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிற பிசாசானவன் தேவனுடைய வார்த்தையைத் திரித்து பேசுவதே தலையாய் காரியமென்று செய்துகொண்டு வருகிறான்.

மனுஷன் தேவனுடைய கையின் கிரியையாயிருப்பதினால் தன்னை படைத்த எஜமானாகிய அவருக்கு செய்ய வேண்டிய கடமை ஒன்றிருக்கிறது என்பதை வலியுறுத்துகிறார் பிரசங்கி. ***காரியத்தின்கடைந்தொகையைக் கேட்போமாக. தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே*** (பிரச.12:13). வாலிபர்களாகிய நாம் அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடக்கும்பொழுது எங்களுக்கென்ன பலன் கிடைக்கும் என்று ஒரு வினாஎழுப்பகூடும். அவர் தரும் பலனை இச்சிறுகட்டுரையில் வார்த்தைகளால் சொல்லி முடியாது. இருந்தாலும் ஒரு சில வசனங்களை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். ***கற்பனையைக் கைக்கொள்ளுகிறவன் ஒரு தீங்கையும் அறியான்....*** (பிர.8:5) நாம் இப்புது வருடத்தில் நம் வழிகளை கர்த்தருக்குள் காத்துக்கொள்வோம். அப்பொழுது ***அவர் நம் வழிகளிலெல்லாம் நம்மை காக்கும்படி, நமக்காகத் தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார்.*** (சங்.91:11)

ஜே. பிக்கின்ஸ்



# வெளிப்படுத்தின விசேஷம்

அதிகாரம்.1:10-20

பத்மு தீவிலிருந்து யோவான் ஒரு ஞாயிற்றுக்கிழமை, தேவனிடத்திலிருந்து ஒரு தரிசனத்தை பெற்றுக்கொண்டேன் என்றுவெளி.1:10-ல் காண்கிறோம். வசனம் 10-ல் ஞாயிற்றுகிழமையானது, கர்த்தருடைய நாள் என்று குறிக்கப்பட்டுள்ளது. ஞாயிற்றுகிழமைக்கு இப்படியொரு பொருள்படும்படியான பதம் வேதாகமத்தில் இங்கு மாத்திரமே உள்ளது. ஞாயிற்றுகிழமை கர்த்தருடைய நாள், ஏனெனில் அந்த நாள் கர்த்தர் உயிர்த்தெழுந்த நாள் (மத்.28:1, மாற்கு.16:2, லூக்கா.24:1, யோவா.20:1), இன்னும் அவருடைய ராஜ்யமாகிய சபை, வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுகிழமை ஆரம்பமானபடியால் (அப்.2 அதி) ஞாயிற்றுகிழமை கர்த்தருடைய நாளிலும், அதாவது ஞாயிற்றுகிழமைகளில் பாடவும், ஜெபிக்கவும், கர்த்தருடைய வசனம் போதிக்கப்படுவதைக் கேட்கவும், கர்த்தருக்குக் காணிக்கை கொடுக்கவும், கர்த்தரின் பந்தியில் பங்குபெறவும் கட்டளையிடப்பட்டிருக்கிறது. அப் (அப்.20:7,1.கொரி.16:2). ஆனால், ஞாயிற்றுக்கிழமையானது, ஓய்வுநாளுக்கு சமமானது அல்ல.

பழைய ஏற்பாட்டில் சனிக்கிழமையானது, ஓய்வுநாளாக கொடுக்கப்பட்டது. (யாத்.20:8-10). பழைய பிரமாணமானது, சிலுவையின்மேல் ஆணியடித்து முடித்து வைக்கப்பட்டுவிட்டபடியால், கிறிஸ்துவர்கள் இனி.ஒருபோதும் ஓய்வுநாளுக்குக் கீழானவர்கள் அல்ல (கொலே.2:14-16), சற்றேறக்குறைய கி.பி..96-ல், ஒரு குறிப்பிட்ட ஞாயிற்றுக்கிழமையில் யோவான் ஆவிக்குள்ளானான் பரிசுத்த வேதாகமத்தில் ஒருவன் ஆவிக்குள்ளானான் என்பதின் பொருள், பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு, தேவனிடத்திலிருந்து ஒருவனுக்கு வெளிப்படுத்தல் கொடுக்கப்படுகிறது என்பதாகும்.எசேக்கியல் தீர்க்கனுக்கு தீர்க்கதரிசனம் கொடுக்கப்பட்டபோது அவன் ஆவிக்குள்ளானான் (எசே.37:1). பலபாஷைகளில் பேசும் திராணியானது, பரிசுத்த ஆவியானவரின் ஒன்பது அற்புத வரங்களில் ஒன்றாகும். (1.கொரி.12:4-11), அது புதிய ஏற்பாட்டு முற்றிலும் வெளிப்படுத்தித் தீருமளவும் சபையில் இருந்தது. (1.கொரி.13:8-10). அந்த நாட்களில், அந்நிய பாஷைகளில் பேசியவன் (இந்த வரம் இன்று நடைமுறையில் இல்லை) ஆவிக்குள்ளானவனாயிருந்தான் (1.கொரி.14:2). வெளிப்படுத்தின விசேஷநூல் முழுவதிலும்,

யோவான் ஆவிக்குள்ளாயிருந்தான் என்றே விவரிக்கப்பட்டுள்ளது. (வெளி.4:2; 17:3; 21:10). அதன் பொருள் பரிசுத்த ஆவியானவரின் மூலமாக தேவனிடத்திலிருந்து, யோவானுக்கு வெளிப்படுத்தல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை வலியுறுத்துவதாகும். ஆகையால், வெளிப்படுத்தல் தேவ ஏவுதலினால் கொடுக்கப்பட்டதுதான் என்று எல்லா விசுவாசமும், நம்பிக்கையும் உடையவர்களாக நாம் இருக்கவேண்டும்.

தேவன், யோவானுக்குக் கொடுத்த தரிசனத்தில், அவர் கண்டவைகளும், கேட்டவைகளும்,எழுதிவைக்கப்பட்டுள்ள ஒன்றுதான் வெளிப்படுத்தின நூல் என்பதை நாம் வெளி.1:10-11 வசனங்களிலிருந்து கவனிக்கவேண்டும். நீ காண்கிறதை ஒரு புத்தகத்தில் எழுது என்று தேவன் யோவானுக்குக் கட்டளையிட்டார். வெளி.1:2, யோவான் கண்ட யாவும் இந்நூலில் உள்ளதாகச் சொல்கிறது. இந்நூலில் ஆரம்பமுதல் முடிவு வரை, யோவான் நான் கண்டேன் நான் கண்டேன் என்று திரும்பத்திரும்ப எழுதுகிறார். தேவனிடத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்ட இந்த தரிசனத்தை வெளிப்படுத்தி எழுதும்படியாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு மனிதகருவிதான் யோவான். இந்த வெளிப்படுத்தல் நூலில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும், மனித ஞானத்தின்படியாக இல்லாமல், தேவ ஏவுதலினாலே கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த தரிசனம் யாருக்காகக் கொடுக்கப்பட்டது? ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கு இது முதலில் கொடுக்கப்பட்டது.(வெளி.1:4,11). ஆனால் இது அந்த ஏழு சபைகளில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல,வெளி.1:1, தம்முடைய ஊழியக்காரருக்கு தேவன் இந்நூலைக் கொடுத்தார் என்று சொல்லுகிறது.இதன்பொருள் வெளிப்படுத்தின நூல் எல்லாக்கிறிஸ்தவர்களுக்கும் என்று பொருள். இன்னும் இந்நூல் எல்லாக் காலங்களிமுள்ளஇழந்தபோனவர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. வெளி.3:20, இயேசு, வாசற்படியிலே நின்று கதவைத் தட்டி இவ்விதம் சொல்கிறார், ஒருவன் என் சத்தத்தை கேட்டுக் கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசிப்பேன்.... இந்நூல் எந்த ஒரு மனிதனுக்கும் அதுபோலவே,வெளி.22:17.18இப்புத்தகம், விருப்பமுள்ளவனுக்கு என்றும் இந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் என்று சொல்கிறது. ஆகையால், இந்நூல் நமக்காவும் கொடுக்கப்பட்ட ஒன்றுதான், ஆகவே, இந்நூலை நாம் ஆர்வத்தோடும், ஜாக்கிரதையோடும் படிப்பது அவசியம்.

வெளி.1:10ல் கர்த்தரால் தனக்குக் கொடுக்கப்பட்ட தரிசனத்தை விவரிக்கத் தொடங்குகிறார். தனக்குப் பின்னாலிருந்து, எங்காள சத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டான். அது உண்மையில் ஒரு எக்காளம் அல்லஆனால் அதன் சத்தம் எக்காள சத்தம் போன்றதாயிருந்தது. வசனம்,11-ல் அந்தப் பெரிதான சத்தம் வார்த்தைகளைப் பேசினது. அந்தச் சத்தம், அல்பாவும், ஒமேகாவும், முந்தினவரும், ,

பிந்தினவருமாயிருக்கிறவருகிறதுக்குச் சொந்தமானது. கிரேக்க மொழியில் அல்பா என்பது முதல் எழுத்தும், ஒமேகா என்பது இறுதி எழுத்துமாகும். இது பேசுகிறவரின் நித்தியத் தன்மையை வலியுறுத்தவதாக உள்ளது. மேலும்,12,13, வசனங்களில், தன்னுடன் பேசுகிற சத்தத்தைக் காணும்படியாக யோவான் பார்க்கத் திரும்பினபோது, யோவான் ஏழு பொன் குத்துவிளக்குகளையும், அவைகளுக்கு மத்தியில் இயேசுவானவர்தான் யோவானிடம் பேசினார். அவர், பாதம் வரையிலான நிலைய்ங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்தார்.

வசனங்கள் 14,15-ல் அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப் போலவும், உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தது. அவருடைய கண்கள் அக்கினி ஜீவாலை போலவும், அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலவும், அவருடைய சத்தம் பெரு வெளி.1:10ல் கர்த்தரால் தனக்குக் கொடுக்கப்பட்ட தரிசனத்தை விவரிக்கத் தொடங்குகிறார். தனக்குப் பின்னாலிருந்து, எங்காள சத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டான். அது உண்மையில் ஒரு எக்காளம் அல்ல, ஆனால் அதன் சத்தம் எக்காள சத்தம் போன்றதாயிருந்தது. வசனம்,11-ல் அந்தப் பெரிதான சத்தம் வார்த்தைகளைப் பேசினது.

வெள்ளத்து இரைச்சல் போலவுமிருந்தது. வசனம் 16-ல் இயேசு, தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார்.. அவர் வாயியிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது. இயேசுவின் வாயிலிருந்து தேவனுடைய வார்த்தை வருகிறது. இயேசு வார்த்தையொன்று அழைக்கப்பட்டார். (யோவா.1:1,1:14. 1யோ.1:1, வெளி.19:13). தேவனுடைய வார்த்தையானது வல்லமையுள்ள ஆவியின் பட்டயமாகும். (எபே.6:17; எபி.4:12) இயேசுவின் வாயிலுள்ள இந்த வல்லமையுள்ள பட்டயம் பற்றி பிற்பாடு அநேக இடங்களில் இந்நூலில் வாசிக்கலாம். (வெளி.2:12.16,19:15,21) வசனம்16 ல் இயேசுவின் முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப்போல் பிரகாசித்தது என்று பார்க்கிறோம். இந்த தரிசனத்தில் கிறிஸ்துவைப் பற்றிய முழுமையான வெளிப்பாடும் பயங்கரமாயுள்ளது. இப்பட்டதான தோற்றம் கொண்ட ஒருவரை நாம் பார்த்தோமானால் என்ன செய்வோம்? யோவான் இக்காட்சியைக் கண்டபோது, கர்த்தருடைய பாதத்தில் செத்தவனை போல் விழுந்துவிட்டான். (வெளி.1:17). நாமாக இருந்தாலும், அப்படித் தான் செய்திருப்போம். ஆனால் இயேசு தமது வலதுகரத்தை யோவர்ன் மீது வைத்து பயப்படாதே என்றார். இயேசு, இங்கேதான் ஒரு சமயம் மரித்தவராயிருந்தார் என்றும், இப்பொழுது உயிரோடிருக்கிறார் என்றும், இனி எப்பொழுதும் உயிரோடிப்பார் என்றும் நம்மனைவருக்கும் நினைவுபடுத்துகிறார். (வெளி.1:18). இதே வசனத்தில் இயேசு மரணத்திற்கும், பாதாளத்திற்குரிய திறவுகோல் தன்னிடத்தில் உண்டென்றும் நினைவுபடுத்துகிறார். யோவான். 5:21-29 வசனப் பகுதியில் பிதாவனவர், நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்தார் என்றும், அவரைக் கனம் பண்ணுகிறவர்களுக்கு நித்திய

ஜிவனைக்கொடுப்பார் என்றும் நாம் பார்க்கிறோம். இயேசு மீண்டும் வரரவார், மரித்தோர் அனைவரும்அவருடைய சத்தத்தையும் கேட்பார்கள். அதன்பின்பு, இயேசு உலகத்ததை நியாயந்தீர்ப்பார் அந்த நியாயத்தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு ஜனங்கள், பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ தங்களது நித்தியத்தைக் கழிப்பார்கள். (வெளி.20:12-15). இயேசுவினிடத்தில் அதிகாரமாகிய திறவுகோல் உண்டு. ஆகவே, நாம் இரட்சிக்கப்படவேண்டுமானால், நாம் கிறிஸ்துவுக்குள் செவிகொடுத்துக் கீழ்ப்படியவேண்டும். யோவான் பார்க்கத் திரும்பினபோது, யோவான் ஏழு பொன் குத்துவிளக்குகளையும், அவைகளுக்கு மத்தியில் இயேசுவானவர்தான் யோவானிடம் பேசினார். அவர், பாதம் வரையிலான நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்தார்.

வசனங்கள் 14,15-ல் அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப் போலவும், உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தது. அவருடைய கண்கள் அக்கினி ஜீவாலை போலவும், அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலவும், அவருடைய சத்தம் பெரு வெளி.1:10ல் கர்த்தரால் தனக்குக் கொடுக்கப்பட்ட தரிசனத்தை விவரிக்கத் தொடங்குகிறார். தனக்குப் பின்னாலிருந்து, எங்காள சத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டான். அது உண்மையில் ஒரு எக்காளம் அல்ல, ஆனால் அதன் சத்தம் எக்காள சத்தம் போன்றதாயிருந்தது. வசனம்,11-ல் அந்தப் பெரிதான சத்தம் வார்த்தைகளைப் பேசினது.


வெள்ளத்து இரைச்சல் போலவுமிருந்தது. வசனம் 16-ல் இயேசு, தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார். அவர் வாயியிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது. இயேசுவின் வாயிலிருந்து தேவனுடைய வார்த்தை வருகிறது. இயேசு வார்த்தையொன்று அழைக்கப்பட்டார். (யோவா.1:1,1:14. 1யோ.1:1, வெளி.19:13). தேவனுடைய வார்த்தையானது வல்லமையுள்ள ஆவியின் பட்டயமாகும். (எபே.6:17; எபி.4:12) இயேசுவின் வாயிலுள்ள இந்த வல்லமையுள்ள பட்டயம் பற்றி பிற்பாடு அநேக இடங்களில் இந்நூலில் வாசிக்கலாம். (வெளி.2:12.16,19:15,21) வசனம்16 ல் இயேசுவின் முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப்போல் பிரகாசித்தது என்று பார்க்கிறோம். இந்த தரிசனத்தில் கிறிஸ்துவைப் பற்றிய முழுமையான வெளிப்பாடும் பயங்கரமாயுள்ளது. இப்பட்டதான தோற்றம் கொண்ட ஒருவரை நாம் பார்த்தோமானால் என்ன செய்வோம்? யோவான் இக்காட்சியைக் கண்டபோது, கர்த்தருடைய பாதத்தில் செத்தவனை போல் விழுந்துவிட்டான். (வெளி.1:17). நாமாக இருந்தாலும், அப்படித் தான் செய்திருப்போம். ஆனால் இயேசு தமது வலதுகரத்தை யோவான் மீது வைத்து பயப்படாதே என்றார். இயேசு, இங்கேதான் ஒரு சமயம் மரித்தவராயிருந்தார் என்றும், இப்பொழுது உயிரோடிருக்கிறார் என்றும், இனி எப்பொழுதும் உயிரோடிப்பார் என்றும் நம்மனைவருக்கும் நினைவுபடுத்துகிறார். (வெளி.1:18). இதே வசனத்தில் இயேசு மரணத்திற்கும், பாதாளத்திற்குரிய திறவுகோல் தன்னிடத்தில் உண்டென்றும் நினைவுபடுத்துகிறார். யோவான். 5:21-29 வசனப்

பகுதியில் பிதாவனவர், நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்தார் என்றும், அவரைக் கனம் பண்ணுகிறவர்களுக்கு நித்திய ஜிவனைக்கொடுப்பார் என்றும் நாம் பார்க்கிறோம். இயேசு மீண்டும் வரரவார், மரித்தோர் அனைவரும்அவருடைய சத்தத்தையும் கேட்பார்கள். அதன்பின்பு, இயேசு உலகத்ததை நியாயந்தீர்ப்பார் அந்த நியாயத்தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு ஜனங்கள், பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ தங்களது நித்தியத்தைக் கழிப்பார்கள். (வெளி.20:12-15). இயேசுவினிடத்தில் அதிகாரமாகிய திறவுகோல் உண்டு. ஆகவே, நாம் இரட்சிக்கப்படவேண்டுமானால், நாம் கிறிஸ்துவுக்குள் செவிகொடுத்துக் கீழ்ப்படியவேண்டும். வெளி.1:19 ல் யோவான் இயேசுவின் வலதுகரத்தில் தான் காண்கிறவன் ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையம், ஏழுபொன் குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுதும்படி மீண்டும் சொல்லப்படுகிறார். அந்த ஏழு நட்சத்திரங்களும், ஏழு சபைகளின் துதர்கள் என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தையின் பொருள் செய்தி எடுத்திச்செல்பவர் என்ற அடிப்படையில் இதற்கு விளக்கம் கொடுக்கலாம். அந்த ஏழு சபைகளின் தூதர்கள் யார் என்று நமக்கு குறிப்பாகச் சொல்லப்படவில்லை. அவர்கள், யோவானிடத்திலிருந்து கடிதங்கள் எடுத்து, அந்தந்த சபைகளுக்குக் கொண்டு சென்று கொடுத்த மனித தூதர்களாக இருக்க அதிக வாய்ப்புண்டு. ஆனால், பரலோக தூதர்களாக இருக்கவும் வாய்ப்புண்டு. நமக்கு திட்டமாகச் சொல்லபடவில்லை.

அந்த ஏழு பொன் குத்து விளக்குகள் என்பது வெளி.1:11லும், மீண்டும் வெளிப்படுத்தல் இரண்டு, மூன்று அதிகாரங்கள் இயேசு அந்த ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியில் உலாவுகிறார் என்று குறிப்பிடப்பட்டுள்ள ஆசியாவிலுள்ள ஏழு சபைகளாம். இங்கே கவனிக்கப்படவேண்டிய முக்கியமான காரியம் என்னவெனில், இயேசு சபையின் தலைராயிருக்கிறார். (எபே.1:22,23, கொலோ.1:18) சபை அவருடைய ஆவிக்குரிய சரீரம். மேலுமாக, அங்கே குத்துவிளக்குகளை உடைய சபைகளுக்கு மத்தியில் மாத்திரம்தான் இயேசு உலாவுகிறார் என்பதை நாம் பார்கக முடியும். அவைகள் இல்லாதபட்சத்தில் (ஒருவேளை அவர்களுக்கு எப்பொழுதுமே இல்லாமலிருந்தாலும் அல்லது அவைகளைப் பெற்றிருந்து ஒரு கட்டத்தில் இழந்து போயிருந்தாலும்) அவர்கள் கர்த்தரால் அங்கீகரிக்கப்படுவதில்லை.அவர்களிடம் தன்னுடைய ஐக்கியத்தை அவர் வைத்துக்கொள்வதுமில்லை. இக்கருத்து இரண்டாம் அதிகாரத்தின் ஆரம்பத்தில், எபேசு பட்டணத்து சபைக்கு எழுதப்பட்ட கடித்ததில் மீண்டுமாக வலியுத்தப்படும். மொத்தத்தில், வெளிப்படுத்தல் ஒன்றாம் அதிகாரம், இயேசுக் கிறிஸ்துவின் மேன்மை அல்லது கெம்பிரத்தை காட்டுகிறது. அவர் ஜீவிக்கிறார், நித்தியமானவாரக உள்ளார், மற்றும் அவருக்கு எல்லா அதிகாரமும் உண்டு. நம்முடைய ஆத்துமா இரட்சிப்படையும் படியாய் அவர் யார் என்று நாம் அவரை அடையாளம் கண்டு, அவருக்குப் பயந்து, அவருக்கு கீழ்ப்படிவது அவசியம்.

**Jon Macon**

**Ezsr**



# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 -9.00<br>9.00 - 9.15 | Box.3815<br>New Delhi -110049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45 - 8.00 | Box.3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sun,Mon<br>Tue, Thu | 2.00 -2.15 | Box . 80<br>Kakinada -533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Sunday<br>Tuesday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00<br>5.30 - 5.45<br>5.45-6.00<br>5.30 - 5.45 | Box . 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum -695 034 | P.K.VARGHESE |
| KANNADA | Sunday | 1.45 - 2.00 | Box.448<br>Bangalore - 560 004 | ROBERT<br>RATHNAKAR |

***Please write to these address for Bible Correspondence Course***
***Magazines and other Christian Literatures***

**ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST**

REGISTERED NEWS PAPER
RNI No. 47661 / 87 - NEW DELHI

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக்கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி.**

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட ஓர் இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**இயக்குநர்,**
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
**த.பெ.எண் - 27, காங்கேயம் - 638 701.**

வெளியிடுவோர்
**கிறிஸ்துவின் சபையார்,**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701
தமிழ்நாடு, இந்தியா
✆ 04257-20030

**Published by Church of Christ, Kangayam.**
**Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM,**